


விலை ரூபா 40

பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 30 வள்ளுவ ஆண்டு 2055
கார்த்திகை மாதம் 03 ஆம் திகதி திங்கட்கிழமை (18.11.2024)




# அமைச்சரவை இன்று சத்தியப் பிரமாணம்

## பிரதமர் ஹரிணி, நிதியமைச்சர் விஜித ஹேரத்



( ஆர். மனோ )

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை பதவிப் பிரமாணம் இன்று (18) முற்பகல் 10.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் இடம்பெறவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி அனைத்து அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களும் இன்றைய தினம் பதவிப்பிரமாணம் செய்து கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

புதிய அரசாங்கத்தின் பிரதமர் பதவியை கலாநிதி ஹரிணி அமரசூரிய வகிப்பார் என அரசியல் வட்டாரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

அதேபோல், இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சராக இருந்த விஜித ஹேரத்திற்கு அதிகாரமிக்க அமைச்சு பதவி வழங்கவும் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதன்படி, நிதி அமைச்சராக விஜித ஹேரத், சுகாதார அமைச்சராக நளிந்த ஜயதிஸ்ஸ, மீன்பிடி அமைச்சராக கே.டி.லால்கந்த, மின்சக்தி–எரிசக்தி அமைச்சராக சுனில் ஹந்துநெத்தி நியமிக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.


எனினும், அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகவில்லை.

அமைச்சரவை இருபத்தைந்துக்கு மட்டுப்படுத்தப்படும் என்றும் சில அமைச்சுக்களுக்கு பிரதி அமைச்சர்களும் நியமிக்கப்படுவார்கள் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாட்டுக்கு அறிவித்திருந்தார்.

அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வழங்குவதில் விசேட கவனம் செலுத்தப்பட்டு, நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங் களுக்கும் நியாயமான (தொடர்ச்சி...) 02

## பிரதி சபாநாயகர் பதவி தமிழருக்கு..?

## ஆசிரியைகளால் தாக்கப்பட்ட மாணவி உயிரிழப்பு



( ஆர்.மனோ )

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் வென்னப்புவ பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் இரு ஆசிரியை களின் கடுமையான தாக்குதலுக்கு இலக்காகி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று (தொடர்ச்சி...) 02

## இன்று வழமைக்கு திரும்பும் அரச அலுவலகங்கள், பாடசாலைகள்

( முகம்மட் முக்தார் )

கடந்த வாரம் பொதுத் தேர்தலுடன் தொடர்பான அலுவல்கள் காரணமாக மூடப்பட்ட பாடசாலைகள், அலுவலக ங்கள் யாவும் இன்று (18)வழமை போல் இயங்க ஆரம்பித்து ள்ளன.

பொதுத்தேர்தல் வாக்களிப்பிற்காக தமது வீடுகளுக்கு சென்ற அரசாங்க ஊழியர்கள் பலர் தமது சேவை நிலையங்களுக்குக் கடமைக்குத் திரும்பியுள்ளனர். கடந்த 13,14 ம் திகதிகளில் மூடப்பட்ட சகல பாடசாலைகளும் இன்று வழமை போல் இயங்குமென (தொடர்ச்சி...) 02

## தமிழரசுக்கட்சியின் தேசியபட்டியல் ஆசனம் சத்தியலிங்கத்திற்கு


### நாடாளுமன்றக்குழு தலைவராக சிவஞானம் சிறிதரன்



( ஆர்.மனோ, கி.வசந்தன்)

தமிழரசுக்கட்சியின் தேசியபட்டியல் ஆசனத்தை ப.சத்தியலிங்கத் திற்கு வழங்க கட்சியின் அரசியற்குழு தீர்மானித்துள்ளதாக அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் வவுனியா ஈரற்பெரியகு ளத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. இதன்போது தேர்தலில் தமிழரசுக்கட்சிக்கு கிடைத்த ஒரு தேசியபட்டியல் ஆசனத்தை யாருக்கு வழங்க வேண்டும் என்பது தொடர்பாக (தொடர்ச்சி...) 02



## புதிய எம்பிகளுக்கு செயலாளர் நாயகத்தின் அறிவிப்பு



பத்தாவது பாராளுமன்றத்தின் முத லாவது கூட்டத்தொடரின் முதலாவது கூட்டத்தை நடத்துவதற்காக, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் தகவல்களையும் பெறுவதற்கு நாடாளுமன்ற இணையதளம் வழியாக உரிய தகவல்க ளை உள்ளிடும் வசதி ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அறிவித்தலொன்றை வெளியிட்டு நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்துள்ளார். (தொடர்ச்சி...) 02

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான

## மேலதிக வகுப்புகளுக்கு நாளை முதல் தடை

(பாலகணேஷ் டிலுக்ஷா, ஏ. எல். எம். முக்தார் )

கல்விப் பொது தராதர உயர்தர பரீட்சைக்கான மேலதிக வகுப்புகள் மற்றும் செயலமர்வுகள் நாளை நள்ளிரவுக்கு முன்னர் நிறைவு செய்யப்படவேண்டுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ஆலோசனைகளை பின்பற்றாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை (தொடர்ச்சி...) 02

## இலங்கை வரலாற்றில் கூடுதல் பெண்கள் நாடாளுமன்றிற்கு தெரிவு

( பாலகணேஷ் டிலுக்ஷா )

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலினூடாக அதிக எண்ணிக்கையிலான பெண்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானோர் அரசியல் பின்புலமற்ற ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டவர்கள் ஆவர். 1931 ஆம் ஆண்டில் அப்போதைய சட்டமியற்றும் சபையாக இருந்த அரசாங்க சபைக்கு அடெலின் மொலமுரே தெரிவாகியிருந்தார். இலங்கை நாடாளு மன்றத்துக்குத் தெரிவான முதல் பெண் என்ற பெருமையும் அவரையே சேரும். இலங்கை (தொடர்ச்சி...) 02

## திலித் ஜயவீர எம்.பி. யாகிறார்



சர்வஜன அதிகாரம் கட்சிக்குக் கிடைக்கப் பெற்ற தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவிக்கு கட்சியின் தலைவர் தொழிலதிபர் திலித் ஜயவீரவை நியமிக்க சர்வஜன அதிகார உயர்பீட குழு தீர்மானித்துள்ளது. அது தொடர்பான தீர்மானத்தை தேர்தல் ஆணைக்குழுவிற்கு நேற்று அக்கட்சி அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கை வருகை




விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழான பொருளாதார மறுசீரமைப்பு திட்டத்தின் மூன்றாவது மீளாய்வை மேற்கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு வருகைத்தந்துள்ளது.சர்வதேச நாணய நியத்தின் இலங்கைக்கான பணிக்குழுவின் பிரதானி பீட்டர் ப்ரூவர் தலைமையில் இந்தக் குழு நாட்டிற்கு வருகைத் தந்துள்ளது. (தொடர்ச்சி...) 02

## மற்றுமொரு டிபெண்டர் ரக வாகனம் பொலிஸாரால் மீட்பு




(எம்.ஏ.அமீனுல்லா )

அடிச்சட்ட (செசி) இலக்கத்தை மாற்றியதாக சந்தேகிக்கப்படும் மற்றுமொரு டிபென்டர் ரக ஜீப் வண்டியை கண்டி பொலிஸார் கைப்பற்றி (தொடர்ச்சி) 02

## கே. கே. எஸ் - நாகபட்டினம் கப்பல் சேவை இடைநிறுத்தம்



( பாலகணேஷ் டிலுக்ஷா )

கே.கே.எஸ் – நாகபட்டினம் கப்பல் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, நாகபட்டினம் துறைமுகத்திலிருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு கடந்த ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி சிவகங்கை பயணிகள் கப்பல் சேவை ஆரம்பமானது.

ஆரம்பத்தில் தினமும் இயக்கப்பட்ட கப்பல் சேவை போதியளவான பயணிகள் இன்மையால் வாரத்தில் 3 நாட்கள் இயக்க திட்டமிடப்பட்டது.

இதன்படி, செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆகிய மூன்று கிழமைகளில் இயக்கப்பட்டது.

இந்நிலையில், பயணிகளின் வருகை அதிகரித்த காரணத்தால் கடந்த (தொடர்ச்சி...) 02

## இலங்கை விமானப்படைக்கு அக்கரைப்பற்றிலிருந்து மூவர் தெரிவு



( வடிவேல் டினேஸ்)

இலங்கை விமானப்படையில் இளம் வீரர்கள் இணைத்துக் கொள்ளும் நேர்முகத் தேர்வு கடந்த வருடம் 2023 இடம் பெற்றிருந்தது. (தொடர்ச்சி...) 02

# கொழும்பு துறைமுக நகரத்தை பார்வையிட வந்த மாணவன் கடலில் மூழ்கி பலி

கொழும்பு துறைமுக நகரத்தை பார்வையிட வந்திருந்த 15 வயதான பாடசாலை மாணவன் ஒருவர் அருகில் உள்ள கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஹட்டன் டிக்கோயா பகுதியை சேர்ந்த குறித்த மாணவன் கல்வி நடவடிக்கைகளுக்காக தற்காலிகமாக கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியில் தங்கியிருந்துள்ளார் என தெரியவந்துள்ளது.

குறித்த மாணவன் 10 வயதான தனது சகோதரன் மற்றும் தமது மாமாவுடன் கொழும்பு துறைமுக நகரத்தை பார்வையிடுவதற்காக நேற்று முன்தினம் மாலை வருகை தந்துள்ளார்.

அதன்போது அவர்கள் கொழும்பு துறைமுக நகரத்தினுள் நீராடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் கடலுக்குள் இறங்கியுள்ளனர். அதன் போது 15 வயதான குறித்த மாணவன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இதனை அடுத்து மாணவனின் மாமா போலீஸ் மற்றும் கடற்படை ஆகியோருக்கு அறிவித்துள்ளார். அதன்போது மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையை அடுத்து காணாமல் போன மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து மாணவனின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு



கொண்டுசெல்லப்பட்டது.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் குறித்த மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

## சர்வதேச...

இந்த குழு எதிர்வரும் 23 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருந்து மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளது.

இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்புக்காக சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் முதல் தவணையாகக் கடந்த வருடம் மார்ச் மாதம் 21 ஆம் திகதி 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்திருந்தது.

அத்துடன், கடந்த வருடம் டிசம்பர் 14 ஆம் திகதி 337 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இரண்டாவது தவணையாக வழங்கப்பட்டன.

அதன் மூன்றாவது தவணையாக 336 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டதுடன், மூன்றாவது மீளாய்வின் இறுதிக் கலந்துரையாடல்கள் தற்போது நடைபெறவுள்ளது. குறித்த மீளாய்வின் பின்னர் நான்காவது தவணை விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆசிரியைகளால்...

வந்த 16 வயது மாணவி உயிரிழந்துள்ளார். இந்நிலையில், மாணவியின் பிரேதப் பரிசோதனை கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், தாக்குதலால் மூளையில் ஏற்பட்ட இரத்தக்கசிவே மரணத்திற்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ராகம போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே மாணவி உயிரிழந்துள்ளார்.

வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த 10ஆம் வகுப்பில் கல்வி கற்ற ரமேஷா தினிதி என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த இரு ஆசிரியைகளும் மீண்டும் கைது செய்யப்பட்டு, நீதிமன்றின் உத்தரவின் பேரில் இன்று 18ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி அவரது வகுப்பாசிரியை மற்றும் மற்றொரு ஆசிரியையால் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

வகுப்பறையை விட்டு வேறொரு மாணவியுடன் வெளியில் சென்ற இம்மாணவி, மீண்டும் வகுப்பறைக்கு வருவதற்கு 20 நிமிடங்களுக்கு மேலானதாக சம்பந்தப்பட்ட இரு ஆசிரியைகளும் பொலிஸாரிடம் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 39 மற்றும் 57 வயதுடைய இரு ஆசிரியைகளும் செப்டம்பர் 13 ஆம் திகதி நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் ஒன்பதாம் திகதி இத்தாக்குதல் இடம்பெற்றதுடன், தாக்குதலுக்கு உள்ளான மாணவி ஆரம்ப சிகிச்சைக்காக மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவரது தலையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, மேல் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சம்பவம் தொடர்பாக மாணவியிடம் வாக்குமூலம் பெறுவதற்காக மூன்று முறை பொலிஸார் வைத்தியசாலைக்குச் சென்றபோதும், மாணவி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்ததால், அது பலனளிக்கவில்லை.

பின்னர் சிறுமி பிசியோதெரபி சிகிச்சைக்காக றாகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். றாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மாணவி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## க.பொ.த...

விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பரீட்சை காலப்பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பரீட்சைகள் தொடர்பாக ஏற்பட்ட சிக்கல்களை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை திணைக்கள அதிகாரிகளுக்கு மேலதிகமாக மாகாண மற்றும் பிராந்திய அலுவலகங்களின் அதிகாரிகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, பரீட்சை மண்டபங்களுக்கு கண்காணிப்பாளர்கள் கையடக்கத் தொலைபேசிகளைக் கொண்டு செல்வதற்கு பரீட்சைகள் திணைக்களம் தடை விதித்துள்ளது.

தேர்வு மையத்தில் முதன்மை கண்காணிப்பாளர் மற்றும் உயர் தலைமை கண்காணிப்பாளர் மட்டுமே தொலைபேசி கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவர்.

கடந்த காலங்களில் எழுந்த பிரச்சினைகளை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உயர்தர பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்கு 333,185 மாணவர்கள் தோற்றவுள்ள நிலையில் 2,312 பரீட்சை நிலையங்களுடன் 319 தொடர்பாடல் மையங்களும் ஸ்தாபிக்கப்படவுள்ளன.

## அமைச்சரவை...

முறையில் நியமனங்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் 21ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூடும் எனவும், இதன்போது சபாநாயகர் உள்ளிட்டவர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் கொழும்பு அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், சபாநாயகராக பிமல் ரத்நாயக்க நியமிக்கப்படுவார் எனவும், பிரதி சபாநாயகராக தமிழர் ஒருவரை நியமிப்பதற்கு ஆலோசனை நடந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

மேலும், ஆளும் கட்சியின் சபை முதல்வராக (பிரதம கொறடா) விஜித ஹேரத் நியமிக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## புதிய எம்.பி.க்கள்...

இதற்கமைய, நாடாளுமன்ற இணையதளத்தின் (**www.parliament.lk**), முகப்பு பக்கத்தில் உள்ள தகவல் இணைப்பில் நுழைந்து உரிய தகவல்களை பூர்த்தி செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறனர். தகவல்களை வழங்குவதற்கான மாற்று வழியாக இந்த இணைப்பிலிருந்து பதிவிறக்கம் செய்யக்கூடிய படிவத்தை நிரப்பி வழங்க முடியுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் முதல் கூட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளை எளிதாக்குவதற்காக, "நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தகவல் கருமபீடம்" 2024 நவம்பர் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மற்றும் 20 ஆம் திகதி புதன்கிழமை ஆகிய தினங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை நாடாளுமன்ற வளாகத்தில் செயல்படும். அனைத்து உறுப்பினர்களுக்கும் தகவல்கள் மற்றும் ஆவணங்களை வழங்குதல், நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடையாள அட்டைக்கான புகைப்படங்களை எடுத்தல் மற்றும் இலத்திரனியல் வாக்களிப்பு நோக்கத்திற்காக கைரேகைகளை பெறுதல் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால், இதில் கலந்துகொள்ளுமாறு உறுப்பினர்களை அன்புடன் கேட்டுக் கொள்வதாக செயலாளர் நாயகம் தனது அறிவிப்பில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பான முழுமையான அறிவித்தல் வருமாறு,

நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்தின் விசேட அறிவித்தல்

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் முதலாவது கூட்டத்தை நடத்துவதற்காக, அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் தகவல்களையும் பெறுவதற்கு பாராளுமன்ற இணையதளம் வழியாக உரிய தகவல்களை உள்ளிடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க நாடாளுமன்ற இணையதளத்தின்(**www.parliament.lk**) முகப்பு பக்கத்தில் உள்ள தகவல் இணைப்பில் நுழைந்து உரியதகவல்களை பூர்த்திசெய்யுமாறு கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தகவல்களை வழங்குவதற்கான மாற்று வழியாக இந்த இணைப்பிலிருந்து பதிவிறக்கம் செய்யக்கூடிய படிவத்தை நிரப்பி வழங்குவதும் செய்யப்படலாம்.

மேலும், பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் முதல் கூட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளை எளிதாக்குவதற்காக, "நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தகவல் கருமபீடம்" 2024 நவம்பர் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மற்றும் 20 ஆம் திகதி புதன்கிழமை ஆகிய தினங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை நாடாளுமன்ற வளாகத்தில் செயல்படும்.

அனைத்து உறுப்பினர்களுக்கும் தகவல்கள் மற்றும் ஆவணங்களை வழங்குதல், நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடையாள அட்டைக்கான புகைப்படங்களை எடுத்தல் மற்றும் இலத்திரனியல் வாக்களிப்பு நோக்கத்திற்காக கைரேகைகளை பெறுதல் ஆகியவற்றுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால், இதில் கலந்துகொள்ளுமாறு கௌரவ உறுப்பினர்கள் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல் கருமபீடத்திற்கு வருகை தரும்போது சாரதியை மட்டும் அழைத்து வரலாம், மேலும் தகவல் கருமபீடத்தில் கௌரவ உறுப்பினர்கள் மட்டுமே கலந்துகொள்ள முடியும். நாடாளுமன்றத்திற்குள் நுழைவதை எளிதாக்க தங்களது தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்தை கொண்டுவருமாறும், பாராளுமன்ற வளாகத்தினுள் நுழையும்போது உறுப்பினர் நுழைவாயிலை பயன்படுத்துமாறும் கௌரவ உறுப்பினர்கள் மேலும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## இலங்கை வரலாற்றில்...

ஜனநாயக குடியரசில் 1989 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 06 சதவீதத்தை விடவும் குறைவாகவே இருந்தது.

இலங்கை வரலாற்றில் நாடாளுமன்றத்திற்கு அதிகளவான பெணகள் தெரிவு செய்யப்பட்ட ஆண்டுகளாக 1989, 2004 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளைக் சுட்டிக்காட்ட முடியும். குறித்த வருடங்களில் தலா 13 பெண் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தனர்.

மேலும்,2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக 9 ஆவது நாடாளுமன்றத்துக்கு 12 பெண் பிரதிநிதிகள் தெரிவாகியிருந்தனர்.

ஆனால் இம்முறை இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 21 பெண் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளமை மிகவும் சிறப்புக்குரியது.

கொழும்பு மாவட்டத்திலிருந்து தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட ஹரிணி அமரசூரிய, கௌசல்யா ஆரியரத்ன, சமன்மலி குணசேகர ஆகியோர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் பிரதமர் வேட்பாளர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, 655,289 விருப்பு வாக்குகளைப் பெற்று கொழும்பு மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக, 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஷ 527,364 வாக்குகளைப் பெற்று அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற வேட்பாளராக இருந்தார். ஆனால் ஹரிணி அந்த சாதனையும் முறியடித்துள்ளமை குறிப்பிடத்தகக்து.

கம்பஹா மாவட்டத்திலிருந்து தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட ஹேமாலி குணசேகர களுத்துறை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட நிலந்தி கொட்டஹச்சி, ஓஷனி உமங்கா ஆகியோரும் தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை, மலையகத்திலிருந்து இம்முறை 03 தமிழ் பெண் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திற்கும் தேர்வாகியுள்ளமை மிகவும் விசேட அம்சமாகும்.

கண்டி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட துஷாரி ஜயசிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட சமிந்திராணி கிரியெல்லவும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

மாத்தளை மாவட்டத்திலிருந்து, தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட தீப்தி வாசலகே மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட ரோஹினி குமாரி கவிரத்னவும் தெரிவாகியுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அனுஷ்கா தர்ஷனி திலகரத்ன மற்றும் கிருஷ்ணன் கலைச்செல்வி ஆகியோரும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்தி சார்பில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட அம்பிகா சாமுவேலும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி காலி மாவட்டத்தில் போட்டியிட்ட ஹசாரா லியனகேவும், மாத்தறை மாவட்டத்திலிருந்து சரோஜா சாவித்திரி போல்ராஜ் ஆகிய இருவரும் தெரிவாகியுள்ளனர்.

அத்துடன் இரத்தினபுரி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்ட நிலுஷா லக்மாலியும் சாகரிக்கா கங்காணி கேகாலை மாவட்டத்திலும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

அத்துடன், தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்டு திகாமடுல்ல மாவட்டத்திலிருந்து முது ரத்வத்தே, குருணாகல் மாவட்டத்தில் கீதா ஹேரத், புத்தளம் மாவட்டத்தில் ஹிருனி மதுஷா விஜேசிங்க மற்றும் மொனராகலை மாவட்டத்திலிருந்து சதுரி கங்காணி ஆகியோரும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

## இன்று வழமைக்கு...

அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்தவாரம் 25 ம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான பரீட்சை மண்டபங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகள் மீண்டும் 23 ம் திகதி முதல் மூடப்படுகின்றன.

## கேகேஸ்...

மாதம் 21 ஆம் திகதி முதல் சனிக்கிழமைகளிலும் இயக்கப்பட்டது.

பின்னர், பயணிகளின் கோரிக்கையை ஏற்று கடந்த 08 ஆம் திகதி முதல் செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய வாரத்தில் 5 நாட்களிலும் இயக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் வடகிழக்கு பருவமழை ஆரம்பமாகியுள்ளதால் கடல் பகுதியில் குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலை உருவாகும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியதைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சிவகங்கை பயணிகள் கப்பல் சேவை நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 18 ஆம் திகதிக்குப் பின்னர் மீண்டும் கப்பல் சேவையை ஆரம்பிக்க நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

## மற்றுமொரு..

யுள்ளனர்.

பதில் பொலிஸ் மா அதிபருக்கு கிடைக்கப்பெற்ற நேரடி முறைப்பாட்டின் பிரகாரம், கண்டியில் உள்ள பிரதான மீன் வியாபாரி ஒருவரின் வசமிருந்த ஜீப் வண்டியே இவ்வாறு நேற்று முன்தினம் (16) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனம் தொடர்பில் இரசாயன பகுப்பாய்வுக்குரிய அறிக்கையை பெற்றுக்கொள்ள அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸ் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரசிக சம்பத் தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## இலங்கை...

இதில் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தேவ கிராமத்தை சேர்ந்த ஒரு ஆண் , இரு பெண்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த வருடம் இலங்கை விமானப் படைக்கு அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களாக சுலக்ஷன், கலிஷ்ரா, வாணி ஆகிய மூவரும் உடற்பயிற்சி பயிற்றுவிப் பாளர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான பாராட்டு நிகழ்வு நேற்று (17) அக்கரைப்பற்று தேவ கிராமத்தில் இடம் பெற்றிருந்தது.இதன் போது ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் கிறிஸ்தவ மத பாதிரியார்கள் உள்ளிட்ட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## தமிழரசுக்கட்சி...

நீண்ட விவாதங்கள் இடம்பெற்றிருந்தது.

விவாதங்களின் பின்னர் குறித்த தேசியபட்டியல் ஆசனத்தை ஏற்கனவே வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்த ப.சத்தியலிங்கத்திற்கு வழங்குவதற்கு அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி, தமிழரசுக்கட்சியின் தேசியபட்டியல் ஆசனத்தை சத்தியலிங்கத்திற்கு வழங்க கட்சியின் அரசியற்குழு தீர்மானித்துள்ளதாக எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்றக்குழு தலைவராக சிவஞானம் சிறிதரன் தெரிவுசெய்யப்பட்டார். நேற்றைய அரசியல் குழு கூட்டத்தின் போதே இந்த தீர்மானமும் எடுக்கப்பட்டிருந்தது.

மேலும், கட்சியின் பேச்சாளர் பதவி தொடர்பாக நாடாளுமன்ற முதலாவது அமர்வின் பின்னர் தீர்மானிக்கப்படவுள்ளதாக சிறிதரன் இதன்போது தெரிவித்தார்.

இதனிடையே, நடந்து முடிந்த தேர்தலில் பெரும் வெற்றியை தனதாக்கிக்கொண்ட தேசிய மக்கள் சக்தி மற்றும் சர்வஜன அதிகாரம் ஆகிய கட்சிகளும் தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் விபரங்களை அறிவித்துள்ளன.

இதன்படி, தேசிய மக்கள் சக்தி சார்பில், பிமல் ரத்நாயக்க, ராமலிங்கம் சந்திரசேகர், கலாநிதி அநுர கருணாதிலக்க, பேராசியரியர் உபாலி பன்னிலகே, எரங்க உதேஷ் வீரரத்ன, அருண ஜயசேகர, கலாநிதி ஹர்ஷன சூரியபெரும, ஜனித ருவான் கொடிதுவக்கு, ஸ்ரீ குமார ஜயகொடி, நஜித் இந்திக்க, சுகத் திலகரத்ன, லக்மாலி காஞ்சனா ஹேமரத்ன, சுனில் குமார கமகே, காமினி ரத்நாயக்க, பேராசிரியர் ருவான் சந்திம ரணசிங்க, சுகத் வசந்த டி சில்வா, அபுபக்கர் ஆதம் பாவா மற்றும் ரத்நாயக்க ஹெட்டிகே உபாலி சமரசிங்க ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

மேலும், சர்வஜன அதிகாரம் கட்சிக்கு கிடைக்கப் பெற்ற தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவிக்கு கட்சியின் தலைவர் தொழிலதிபர் திலித் ஜயவீரவை நியமிக்க சர்வஜன அதிகார உயர்பீட குழு தீர்மானித்துள்ளதுடன், அது தொடர்பான தீர்மானத்தை தேர்தல் ஆணைக்குழுவிற்கு இன்று அறிவித்துள்ளது.

# அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரை நிகழ்த்தும் நேரத்தில் மாற்றம்





பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரை மு.ப 11.30 இற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நிகழ்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொள்கைப் பிரகடன உரை பிற்பகல் 03 மணிக்கு நிகழ்த்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நேரத்தில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 33 (அ) உறுப்புரையின் பிரகாரம் நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஒன்றின் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கும், அரசியலமைப்பின் 33 (ஆ) உறுப்புரையின் பிரகாரம் நாடாளுமன்றத்தின் வைபவரீதியான அமர்வுகளில் தலைமை தாங்குவதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் காணப்படுகின்றது.

இந்நிலையில் ஜனாதிபதியால் அவரது அரசாங்கத்தின் எதிர்கால நோக்கு தொடர்பிலான விளக்கமான பகுப்பாய்வு கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக மக்களுக்கு முன்வைக்கப்படும்.

# புதிய ஆட்சிக்கு அதிகபட்ச ஆதரவை வழங்க தயாராக உள்ளோம்

## சஜித் ஜனாதிபதிக்கு வாழ்த்து



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 10 ஆவது நாடாளுமன்றத்திற்கான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற பொதுத் தேர்தலில், ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று மாபெரும் வெற்றியீட்டியதற்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம். என முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கை மக்கள் எதிர்பார்க்கும் நல்லாட்சிக்குத் தேவையான பலமும், மக்களின் கனவுகள் நனவாகும் தேசத்தை உருவாக்குவதற்குத் தேவையான ஆற்றலும் தற்போதைய ஆட்சிக்கு குறைவில்லாமல் கிட்டியுள்ளது. இதன் ஊடாக ஒரு நாடாக நாம் தற்போது எதிர்நோக்கி வரும் சிரமங்களை போக்கக்கூடிய வல்லமை தற்போதைய ஆட்சிக்கு கிட்டியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ், இந்நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில், தமது ஆட்சிக்காலத்தில் தமது கொள்கைகளையும் திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதே தமது சவாலாக இருப்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர் என நாங்கள் நம்புகின்றோம்.

இவ்வாறு, “வளமான நாடு அழகான வாழ்க்கை”என்ற அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இந்நாட்டின் 220 இலட்சம் மக்களின் அபிலாஷைகளைக் கட்டியெழுப்பும் இயலுமை அவர்களுக்கு உதயமாகட்டும் என ஐக்கிய மக்கள் சக்தியினராக நாம் பிரார்த்திக்கிறோம்.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஜனநாயகத்தின் அடிப்படையிலான அனைத்து குடிமக்கள் உரிமைகளையும் பாதுகாக்கும், சமூக நீதியைப் பாதுகாக்கும் நல்லாட்சிக்காக வேண்டி, புதிய ஆட்சிக்கு அதிகபட்ச ஆதரவை வழங்க தயாராக உள்ளோம் என்பதையும் இங்கு சுட்டிக்காட்டுகிறோம்.

தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க எதிர்க்கட்சி அரசியல்வாதியாக அப்போது கூறியது போல், தற்போதுள்ள அரசியல் சக்திகள் மூன்றில் இரண்டு அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் சட்டங்களை இயற்றியதை மறந்துவிடக் கூடாது என்பதையும் தற்போதைய அரசாங்கத்திற்கு நினைவூட்டுகிறோம்.

இந்த தீர்மானமிக்க தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்திக்கு 1,968,716 வாக்குகளைப் பெற்றுத் தந்தும், 40 நாடாளுமன்ற ஆசனங்களை வெற்றியீட்டித் தந்தும், கட்சியின் கொள்கைகள், வேலைத்திட்டம் மற்றும் தலைமைத்துவத்தின் மீது நம்பிக்கை கொண்ட மக்களுக்கும், கட்சியின் வெற்றிக்காக தோள் கொடுத்த சகல தரப்பினருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக நான் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வளமான நாட்டிற்குத் தேவையான அரசியல் நிகழ்ச்சி நிரல்களை தயாரித்த நாங்கள், ஐக்கிய மக்கள் சக்தியாக எதிர்காலத்திலும் இந்நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், மிக உன்னத ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாக்கும் பணிக்காகவும் பெரும் அதிஷ்டானத்துடன் அர்ப்பணித்து செயற்படுவோம் என்பதை சகல இலங்கை வாழ் குடிமக்களுக்கும் சுட்டிக்காட்டுகிறோம்.

இப்பூலோகத்தில், இலங்கையின் தனித்துவ அடையாளத்தை நிலைப்படுத்த நாம் ஒன்றாய் இணைந்து நடவடிக்கை எடுப்போம். என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

# ஆசன மோதல்களை தவிர்த்து தமிழர் தரப்புக்கள் ஒன்றிணைய வேண்டும்



ஆசன மோதல்களை கைவிட்டு தமிழ் தரப்பு ஒன்றிணைய வேண்டுமென தெரிவித்த சட்டத்தரணி வி. மணிவண்ணன், தமிழர் தரப்புக்கள் ஒன்றிணைய வேண்டுமெனவும் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ் தரப்புக்களும் ஒண்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் ஞாயிற்றுக்கிழமை (17) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இடதுசாரிகளுக்கு என பண்பியல்வு இருக்கிறது. அவர்கள் தமக்கு ஏற்றவாறு சட்டங்களை மாற்றி தமது ஆட்சியை தக்க வைத்துக்கொண்டிருப்பார்கள்.

இதனை உணர்ந்த கொண்டு தமிழர்தரப்பு ஒற்றைமைப்பட வேண்டும்.

வடக்கையும் கிழக்கையும் பறிகொடுத்து விட்டு, எங்கள் மீது திணிக்கப்பட போகும் தீர்வுகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட போகும் என்பதனை உணர்ந்து கொண்டும்,

உள்ளூராட்சி தேர்தல் மற்றும் மாகாண சபை தேர்தல்களிலும் அவற்றினை தமிழர் தரப்பு பறிக்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இதனை உணர்ந்து தமிழர் தரப்புக்கள் ஒற்றுமைப்பட வேண்டும்.

இதனை நாம் அழைப்பாக கூட விடுகின்றோம்.

தேர்தலில் தோற்றுபோனவன் என இதனை பலர் எள்ளி நகையாடலாம்.

அவ்வாறில்லாமல் தமிழ் தலைமைகள் ஒன்றுபட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

பிளவுபட்ட தமிழர்களாக தொடர்ந்தும் இருக்க வேண்டும் என விரும்பில்லை. கூட்டு இப்படித்தான் இருக்க வேண்டும் என கூறவில்லை.

தேசிய மக்கள் சக்தி வாக்களித்து விட்டார்கள் என தமிழ் வாக்களர்களை மலினப்படுத்த விரும்பவில்லை.

நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றவர்களும் ஒண்றிணைந்து செயற்பட வேண்டும்.

பொதுக்கட்டமைப்பின் உடைவுக்கு, பொது அமைப்புக்கள் தான் பொறுப்பேற்க வேண்டும். அவர்கள் தான் உடைத்தார்கள். அதனை தொடர்ந்து கட்சி தலைவர்களின் ஈகோ மற்றும் ஆசன பங்கீடும் காரணமாக அமைந்திருந்தது என மேலும் தெரிவித்தார்.

# ஐ.தே. கவின் தவிசாளர் மகிழ்ச்சி தெரிவிப்பு



தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வெற்றி குறித்து மிக்க மகிழ்ச்சி அடைவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க தலைமையிலான அரசாங்கம் வரலாற்று வெற்றியை பதிவு செய்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் ஆட்சி செய்த எந்தவெரு அரசாங்கத்தினாலும் வெற்றி கொள்ள முடியாத வடக்கு கிழக்கு வாழ் மக்களின் வாக்குகளையும் இந்த அரசாங்கம் வென்றுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையர்கள் என்ற ரீதியில் தேசிய மக்கள் சக்தி அடைந்த வெற்றி குறித்து மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகள் தொடர்பிலேயே அவர் ஊடகங்களிடம் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

# வாக்களித்தோருக்கு நன்றி தெரிவித்தார் ஹிஸ்புல்லாஹ்

**(காத்தான்குடி நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியமைக்காக தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் வெள்ளிக்கிழமை(15) காத்தான்குடி மெத்தைப் பெரிய ஜும்ஆ பள்ளிவாயலில் ஜும்ஆ தொழுகையின் பின்னர் மக்களுக்கு எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்த ஹிஸ்புல்லாஹ் தான் ஒரு பிரதேசத்துக்கு மாத்திரமன்றி மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எனவும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பிரதேச மக்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் தனக்கும் வாக்களித்திருப்பதாகவும் குறிப்பிட்டு அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

இதில் பெருந்திரளான பொது மக்கள் ஊரின் உலமாக்கள், புத்திஜீவிகள், வர்த்தகர்கள், இளைஞர்கள், கட்சி உறுப்பினர்கள், வேட்பாளர்கள், தொண்டர்கள் என பலரும் கலந்துகொண்டதுடன், கலாநிதி ஹிஸ்புல்லாஹ்வை அரவணைத்து தமது தமது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தினர்.

இதன் பின்னர ஏறாவூரில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேற்பாளர் நளீம் அவர்களுடன் ஏறாவூர் மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டதுடன் ஓட்டமாவடிக்கும் சென்று அங்குள்ள மக்களையும் சந்தித்த நன்றி தெரிவித்தார்.

# பொதுஜன பெரமுன வேட்பாளரின் வீட்டுக்கு தீ வைக்க முயற்சி



(காத்தான்குடி நிருபர்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட அப்துல் வஹாபின் அலுவலகம் (16) நள்ளிரவு வேளையில் இனந்தெரியாத நபர்களினால் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

அலுவலகத்தின் பெனர், ஜன்னல்கள் மற்றும் கண்ணாடிகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன் அலுவலகத்தினை தீ மூட்ட எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# நாடாளுமன்றத்துக்கு தெரிவான கிழக்கின் புதிய முகம்கள்




(ஏ.எச்.ஏ. /ஹஸைன்)

கடந்த 14ஆம் திகதி நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் விருப்பு வாக்கின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவான புதிய மற்றும் பழைய முகங்களின் விபரம் வருமாறு.

### மட்டக்களப்பு மாவட்டம்

இலங்கை தமிழரசு கட்சி சார்பில்

இராசமாணிக்கம் சாணக்கியன் 65,458 (முன்னாள் பா.உ)

ஞானமுத்து சிறிநேசன் 22,773 (முன்னாள் பா.உ)

இளையதம்பி சிறிநாத் 21,202 (வைத்தியர் – புதுமுகம்)

### தேசிய மக்கள் சக்தி

கந்தசாமி பிரபு 14,856 (புதுமுகம்)

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா 32,410 (முன்னாள் பா.உ)

### தேசிய மக்கள் சக்தி

அருண் ஹேமச்சந்திர – 38,368 (புது முகம்)

ஏ.ஜி.ஆர். பிரியசஞ்ஜன – 25,814 (புதிய முகம்)

### ஐக்கிய மக்கள் சக்தி

இம்ரான் மஹ்ரூப் – 22,779 (முன்னாள் பா.உ)

### இலங்கை தமிழரசுக் கட்சி

கே.எஸ். குகதாசன் – 18,470 (முன்னாள் பா.உ)

திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தின் இறுதி முடிவுகள்

தேசிய மக்கள் சக்தி அம்பாறை மாவட்டத்தை வெற்றி கொண்டது.

இதன்படி தேசிய மக்கள் சக்தி 146,313 வாக்குகளைப் பெற்று 04 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது.

### தேசிய மக்கள் சக்தி

வசந்த பியதிஸ்ஸ 71120 (புதிய முகம்)

மஞ்சுள ரத்னாயக்க 50838 (புதிய முகம்)

பிறியந்த விஜேரத்ன – 41313 (புதிய முகம்)

முத்துமெனிக்கே ரத்வத்த – 32145 (கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவான ஒரேயொரு பெண் – முன்னாள் பிரதேச சபைத் தலைவர்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் எம்.எம். தாஹிர் 14511

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் – மீராஸாஹிபு உதுமாலெப்பை 13016 (கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் கவிந்திரன் கோடீஸ்வரன் 11962 (முன்னாள் பா.உ)



## ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com


# 'தேசம்'–'சுயநிர்ணய உரிமை' இனவாதமல்ல

தேசிய மக்கள் சக்திக்கு பெருமளவில் வாக்களித்ததன் மூலம் வடபகுதி மக்கள் இனவாதத்தை கைவிட்டுள்ளதாக ஜேவிபியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறியிருக்கிறார். ஆனால், ஓர் இனத்தின் 'சுயமரியாதை - நாகரிகம்' 'மரபு வழித் தாயகம்' என்பதை உள்ளடக்கிய அரசியல் விடுதலைப் போராட்டம் 'இனவாதம்' அல்ல.

'இனவாதம்' என்பது ஓர் இனம் ஏனைய இனங்களைவிட மேலானது என்ற உள்ளார்ந்த எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டது.

ஓர் இனத்தின் 'சுயமரியாதை - நாகரிகம்' என்பது 'சுயநிர்ணய உரிமை' 'தேசம்' பற்றிய கோட்பாட்டுக்குள் அடங்கும். ஆகவே, இவற்றை இனவாதம் என்றால் 'இலங்கை அரசு' என்ற கட்டமைப்பின் ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் பௌத்த சமய முன்னுரிமையும் தமிழ் - முஸ்லிம் பிரதிநிதிகள் ஜனாதிபதியாக - பிரதமராக பதவி வகிக்க முடியாத பின்னணிகளும் இனவாத நோக்கம் கொண்டவை என்று பொருள் கொள்ள முடியும் அல்லவா?

1945ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையின் உருவாக்கத்தின் போது, ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் 1(2), 55(C) சரத்துகளில், 'சம உரிமை, மக்களின் சுயநிர்ணய உரிமை (Equal Rights and Self-Determination of Peoples) ஆகியவற்றின் அடிப்படையிலான தேசங்கள் பற்றிய சட்டவிளக்கம் உண்டு.

இலங்கைத்தீவில் 'சோசலிச சமத்துவம்' என்பதை அடிப்படையாகக் கொண்டு ஜேவிபி இரண்டு முறை ஆயுதப் போராட்டம் நடத்தித் தோல்வி கண்ட நிலையில், 1994 ஆம் ஆண்டு முதல் ஜனநாயக வழியில் அரசியலுக்குள் நுழைந்தது. ஆனால், ஆரம்பகாலம் முதல் ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை என்பதை ஏற்க மறுத்திருந்தது.

இப் பின்னணியில் 2024 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் அறுதிப் பெரும்பான்மை கொண்ட நாடாளுமன்றத்துடனும் ஆட்சிக்கு வந்துள்ள ஜேவிபி எனப்படும் மக்கள் சக்தி தற்போது 'தேசம்' 'சுயநிர்ணய உரிமை' என்ற ஓர் இனத்தின் சுயமரியாதைக்குரிய கோட்பாடுகளை இனவாதமாகச் சித்தரிக்க முனைவது அரசியல் வேடிக்கை.

வெளிச் சக்திகளின் வற்புறுத்தல்கள் இன்றி, ஒரு இனக் குழுமம் தனது செயற்பாடுகளைத் தானே தெரிவு செய்துகொள்ளும் தத்துவமே சுயநிர்ண உரிமை என்பதன் மற்றுமொரு விளக்கம்.

தேசம் (Nation) என்பது பெரும்பாலும் ஒரே மொழியை தாய்மொழியாய் கொண்ட இனக் குழுக்கள் வாழும் தாய்நிலப் பகுதிகளாகும். நாடு (Country) என்பது நிர்வாகத்துக்காக தோற்றுவிக்கப்பட்ட பகுதியாகும். உலகில் பல தேசங்களை கொண்ட நாடுகளும் உண்டு.

சங்க இலக்கியங்களில் தமிழ்த்தேசம் என்பதற்கு வரையறையாக 'மொழி' என்பதை மையமாக் கொண்டு சொல்லப்படுகிறது. பெரும்பாலும் தேசம் என்பதற்கு மொழி, மரபு, இனக்குழு, குடிவழக்கு போன்றவை ஒருங்கே அமையப்பெற்றதாக வரையறை வகுக்கப்படுகிறது.

வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் அரசியல் விடுதலையை எடுத்துரைத்த திம்புக் கோட்பாட்டின் முதலாவது பகுதியானது 'இலங்கைத் தமிழர் ஒரு தேசமாக அங்கிகரிக்கப்படுதல்' என்று சட்ட வியாக்கியானம் செய்கிறது.

தேசம் என்ற சொல்லை வரைவிலக்கணம் செய்த சோவியத் யூனியனின் காம்யூனிஸ போராளியான ஜோசப் ஸ்டாலின், 'வரலாற்று ரீதியாகக் கட்டமைந்த, பொதுவான மொழி, பொதுவான பிரதேசம், பொதுவான பொருளாதார வாழ்க்கை, பொதுக் கலாசாரத்தினூடாக வெளிப்படும் பொதுவான உளவியலமைப்பு ஆகிய அடிப்படைகளைக் கொண்டமைந்த, நிலையான மக்கள் சமூகமொன்று, ஒரு தேசமாகும்" என்று வரையறுக்கிறார்.

குறிப்பாக பொதுவான மொழி, பொதுவான பிரதேசம், பொதுவான பொருளாதார வாழ்க்கை, பொதுக் கலாசாரத்தினூடாக வெளிப்படும் பொதுவான உளவியலமைப்பு ஆகிய அம்சங்களை, ஒரு மக்கள் சமூகமானது, ஒரு தனித்த தேசமாக வரையறுக்க முடியும்.

ஒரு தேசத்தின் இருப்பு என்பது, 'நித்திய பொதுவாக்கெடுப்பு' என்று ஏனஸ்ட் றெனன் என்ற அறிஞன் வரையறுக்கிறார்.

இதனை மையமாக் கொண்டே வடக்குக் கிழக்கு இணைந்த தாயகம் என்பதற்கும் ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமை என்பதை அங்கீகரிக்கவும் பொதுவாக்கெடுப்பு ஒன்றை சிவில் சமூக அமைப்புகள் கோரி வருகின்றன.

'சர்வதேச சட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட மூலாதாரங்கள், சுயநிர்ணய உரிமையானது பொதுவாக உள்ளகச் சுயநிர்ணய உரிமை மூலம் நிறைவேற்றப்படுவதாக நிறுவுகிறது' என்று கியூபெக் மாநிலத்தின் பிரிவினை தொடர்பான வழக்கில், கனடிய உச்சநீதிமன்றம் பொருள் கோடல் செய்துள்ளது.

ஆகவே, இச் சர்வதேச சட்ட விளக்கங்களை எவருமே மறுக்க முடியாது.

1920 ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய இயக்கப் பிளவும் 1921 இல் உருவான தமிழர் மகா சபையும் சிங்கள - தமிழ் இன முரண்பாட்டின் ஆரம்பம் ஆகும். அன்றில் இருந்து இன்றுவரை உருவாக்கப்பட்ட எந்தவொரு அரசியல் யாப்புக்களிலும் ஈழத் தமிழர்களின் சுயநிரிணய உரிமை மறுதலிக்கப்பட்டு வந்த பின்னணியில் அகிம்சைப் போராட்டங்களும் அதன் பின்னர் ஆயுதப் போராட்டங்களும் உருவெடுத்திருந்தன.

2009 மே மாதத்திற்குப் பின்னரான 15 ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக மறுதலிப்புகளே விஞ்சிக் காணப்பட்டன. இன நல்லிணக்கத்தை ஏற்கும் பொறுப்புக் கூறலில் இருந்து இலங்கை விலகிச் செல்கிறது என ஜெனீவா மனித உரிமைச் சபையும் குற்றம் சுமத்தியிருந்தது.

இப் பின்னணியில் புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்கும் போது தமிழர்களின் 'தேசம்' 'சுயநிர்ணய உரிமை' மற்றும் வடக்கு, கிழக்கு இணைப்பு பற்றிய உரையாடல்கள் அனைத்தையும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இனவாதமாகவே கருதும் என்றால், பொருளாதார நெருக்கடி பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்காது.

1948 இல் இருந்து அரசியல் - பொருளாதார பொறிமுறைகள் வகுக்கப்பட்ட போது தமிழ் - முஸ்லிம் மக்கள் உள்வாங்கப்பட்டவில்லை. இதனால், எழுந்த 30 வருட போர் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணம் என்கிறார் அசோக லியனகே என்ற

# தமிழ்க் கட்சிகள் ஐக்கியத்தை இழந்தால் அசுர பலத்தோடு மோத முடியாது



## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர்

**வாஸ் கூஞ்ஞ**

ஒரே இலக்கில் செயல்பட முனைவோர்கள் பிரிந்திருந்ததனால் வடக்கு மாகாண தேர்தல் களம் பல்வேறு விதமான சோதனைகளை ஏற்படுத்தியிருக்கிறது. கிழக்கு மக்கள் விழித்துக் கொண்டதால் தம்மை தற்காத்துக் கொண்டனரென தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு பிற்பாடு தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் விடுத்திருக்கும் அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கடந்த எழுபது ஆண்டு கால அரசியல் உரிமைக்கான ஜனநாயக மற்றும் ஆயுதப் போராட்டங்களை எதிர்கொண்ட தமிழினம், பல்வேறு விதமான இழப்புகளையும் , நெருக்கடிகளையும் , வலிகளையும் , வாழ்வியல் சுமைகளையும் எதிர்கொண்டு வருகின்றது.

ஆனால், 2009க்கு பின்னர் கடந்த 15ஆண்டுகளாக பல்வேறு நெருக்கடிக்குள் தமிழினம் சிக்கித் தவித்தது. காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வருபவர்கள் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை தொடர்ச்சியாக வன்வலு கடந்த மென் வலுவில் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இதனை எதிர்கொள்வதே பாரிய சவாலாக உள்ளது. அதிலும் பிரிந்து நின்று எதிர்கொள்வது என்பது சாத்தியமில்லாத ஒன்று.

ஆகவே, ஒன்றாக இணைந்து அரசின் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. தற்போது தமிழ்க்கட்சிகளின் பதவிச் சண்டையால் தங்களுக்குள் முரண்பட்டு பல அணிகளாக பிரிவடைந்துள்ளனர்.

தமக்குள்ளான முரண்பாடு, பொது எதிரியை மகிழ்விக்கும் இந்த தேர்தல் களம், தமிழ்க்கட்சிகள் தமது முரண்பாட்டையே பேசு பொருளாக்கியது. இதனால்,வெறுப்படைந்த பொதுமக்கள் தமிழ்த்தேசியக் கோட்பாட்டுச் சித்தாந்தத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

தமிழ்க்கட்சிகளிலும் பல்வேறு விதமான தவறுகளும், குறைபாடுகளும் காணப்படுகின்றன. அவற்றை அவர்கள் விரைவில் தீர்த்துக் கொள்ள வேண்டும். ஒரே இலக்கில் செயல்பட முனைவோர்கள் பிரிந்திருந்ததனால் வடக்கு மாகாண தேர்தல் களம் பல்வேறு விதமான சோதனைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

கிழக்கு மக்கள் விழித்துக் கொண்டதால் தம்மை தற்காத்துக் கொண்டனர். அவர்களுக்கு எமது பாராட்டுக்களும் , வாழ்த்துகளும்,

ஆனால், வடக்கில் உள்ள நிலைமை மிக மோசமாகிவிட்டது. ஆளும் அரசே வெற்றி பெற்றிருப்பதனால், எமது தமிழ்த் தேசியவாத அபிலாசைகளை எவ்வாறு பூர்த்தி செய்யப் போகின்றோம். என்கின்ற கேள்வி எழுகிறது. எனவே, தமிழ்த்தேசிய கட்சிகள் தமக்குள் இருக்கின்ற பகைமையை மறந்து குறைந்தபட்சம் ஒன்றாக இணைந்து மீண்டும் கூட்டமைப்பாக இயங்க வேண்டியது காலத்தின் கட்டாயமும் நிர்ப்பந்தமும் ஆகும்.

இவ்வாறான ஐக்கியமில்லாவிட்டால் அசுர பலத்தோடு வெற்றி பெற்றுள்ள அரசை எதிர்கொள்ளக்கூடிய வலிமை தமிழர் தரப்பிடம் இல்லாமல் போய்விடும்.

ஆகவே,எதிர்காலத்தில் நடைபெறுகின்ற தேர்தல்களிலும் சரி , தமிழ்த்தேசிய உரிமை ஜனநாயக போராட்ட விடயங்களிலும் சரி, ஒன்றாக இணைந்து எதிர்கொள்வதே அவசியமாகும். அதனையே மக்களும் விரும்புகிறார்கள்.

> **தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயம்**

கடந்த பல வருடங்களாக இவ்வாறான ஐக்கிய முயற்சிகளை ஏற்படுத்தியவர்கள் என்கின்ற வகையிலும்,தேர்தலில் தமிழ்த்தேசியத்திற்கு வாக்களியுங்கள் என கோரிக்கை விடுத்ததன் உரிமையிலும் எதிர்வரும் நாட்களில் தமிழ்த்தேசியக் கட்சிகளை ஐக்கியப்படுத்தும் முயற்சியில் ஈடுபட இருக்கின்றோம். அதற்கு நீங்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்.

ஆளுக்கு ஆள் துரோகிப்பட்டம் வழங்குவதும் ஒரு கட்சி வந்தால் இன்னொரு கட்சி வரமாட்டேன் எனக்கூறும் வரட்டு வாதங்களை அடியோடு மறந்து விடுங்கள் எனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

நடந்து முடிந்த தேர்தல் வடக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசிய நீக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதற்கு தார்மீக பொறுப்பெடுக்க வேண்டியது சகல தமிழ்த்தேசியக் கட்சிகளும் ஆகும்.

தமது குறைபாடுகளையும் , செயல்பாடின்மையும் இனிமேலாவது திருத்திக் கொள்வதற்கு முன் வர வேண்டும். ஆனாலும் தமிழ் மக்கள் இன ரீதியான சிந்தனைதுவத்தை மறந்து தேசிய கட்சிக்கு வாக்களித்தது என்பது மிகவும் வேதனைக்குரிய பரிதாபகரமான நிலைப்பாடு ஆகும்.

தமிழ் மக்களுக்கு பிரச்சினை எதுவும் இல்லை எனும் தோற்றப்பாட்டை வெளிப்படுத்திவரும் ஆபத்துண்டு. அந்த மக்கள் எதிர்வரும் காலத்தில் தங்களுடைய எண்ணங்களை மாற்றிக்கொள்ள வேண்டும் எனவும் நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

ஏனெனில் தேசிய கட்சிகளுக்குள் கரைந்து போவது என்பது தமிழ்த்தேசிய இருப்பை ஒருபோதும் கூர்மையாக தக்க வைக்க கூடிய கள நிலைமை உருவாகாது என்பதனையும் எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே எமது முயற்சிக்கு சகல கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம் என தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாண மக்களின் சிந்தனை மாற்றம்

## வடக்கில் முதல் முறையாக ஐந்து ஆசனங்களை கைப்பற்றிய தேசிய கட்சி

**சுப்ரமணியம் நிஷாந்தன்**

ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களை கைப்பற்றி பெரு வெற்றி பெற்றிருந்தாலும் , நாட்டிலே பேசுபொருளாக இப்பொழுது இருப்பது யாழ்ப்பாணத்தில் பெற்ற வெற்றியாகும்.

யாழ்ப்பாணம் என்பது, தேசியக் கட்சிகள் நுழைய முடியாத கோட்டையாகவே இருந்தது. தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற, வடக்கு,கிழக்கு மாகாணங்களில், தேசியக் கட்சிகளால் கால் பதிக்க முடியாத அரசியல் தளமாகவே இதுவரை இருந்து வந்திருக்கிறது.

முப்பது வருட கால கொடூர யுத்தத்தினாலும் பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளும் சிக்கித் துவண்டு வருகின்ற இந்தப் பிரதேச மக்கள், விடிவை நோக்கிய பயணத்தையே இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், நாட்டின் சகல பகுதிகளிலும் மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றம் ஒன்றை, வடக்கு மக்களும் நாட்டம் கொண்டுள்ளார்கள் என்பதுதான், யாழ்ப்பாண வெற்றியும் நமக்கெல்லாம் புடம் போட்டு காட்டுகின்றன. இந்தப் பொதுத் தேர்தல், வடபகுதி மக்கள் மத்தியில் ஒரு சிந்தனை மாற்றத்தை வெளிக்காட்டி இருக்கிறது.

தமிழ் தேசியத்திற்காக வாக்களியுங்கள் என்ற, உச்சக்கட்ட பிரசாரத்தை தமிழ் கட்சிகள் முன்னெடுத்த போதிலும், மாற்றம் ஒன்றே வேண்டும் என்று, வடக்கு, கிழக்கு மக்கள், குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் கொடுத்திருக்கும் செய்தி, தென்பகுதி மக்களையும் சிந்திக்க வைத்திருக்கிறது.

பொதுத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் உள்ள இரண்டு தேர்தல் மாவட்டங்களையும் தேசிய மக்கள் சக்தி வெற்றிக்கொண்டுள்ளதுடன், 5 ஆசனங்களையும் கைப்பற்றி புதிய வரலாறு



படைத்துள்ளது.

பிரதான தேசியக் கட்சியொன்று பொதுத் தேர்தலில் வடமாகாணத்தை வெற்றிக்கொண்டுள்ளமை இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது முதல் வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வெற்றிபெற்று வந்தது. 2001ஆம் ஆண்டுக்கு முன்னரும் வடக்கை மையப்படுத்தி இயங்கிய தமிழ் கட்சிகளே யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தேர்தல் மாவட்டங்களை கைப்பற்றியிருந்தன.

ஆனால், முதல் முறையாக ஆளுங்கட்சியாக உருவெடுத்துள்ள தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தேர்தல் மாவட்டங்களை வெற்றிகொண்டு புதிய வரலாற்றை படைத்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் 3 ஆசனங்களையும், வன்னி மாவட்டத்தில் 2 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி வெற்றிக்கொண்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட பல்வேறு பிரதான தேசிய கட்சிகள் வடக்கு மாகாணத்தில் கடந்த காலத்தில் ஆசனங்களை கைப்பற்றியிருந்த போதிலும் யாழ். மற்றும் வன்னி தேர்தல் மாவட்டத்தை முழுவையாக வெற்றிக்கொள்ளவில்லை.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் கட்சிகள் ஆதரிக்கும் வேட்பாளர்களது கட்சிகளே வழமையாக வடக்கில் வெற்றிபெற்றுள்ளன. இம்முறையும் இலங்கை தமிழரசுக் கட்சி உட்பட சில கட்சிகள் வழங்கிய ஆதரவின் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தியே இந்த இரண்டு தேர்தல் மாவட்டங்களையும் வெற்றிகொண்டிருந்தது.

வடக்கு மக்கள் மத்தியில் பாரம்பரிய அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகள் மீது ஏற்பட்டுள்ள வெறுப்பு காரணமாகவே மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு அமோக ஆதரவை வழங்கியுள்ளதாக வடக்கின் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் வெளியான பெறுபேறுகளின் பிரகாரம் தேசிய மக்கள் சக்தி 80,830 வாக்குகளை பெற்று 3 ஆசனங்களையும், இலங்கை தமிழரசு கட்சி 63,377 வாக்குகளை பெற்று 1 ஆசனத்தையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 27,986 வாக்குகளை பெற்று 1 ஆசனத்தையும், சுயேட்சைக்குழு 17 27,855 வாக்குகளை பெற்று 1 ஆசனத்தையும் பெற்றுள்ளன.

# வல்லாதிக்க சக்திகளின் கழுகு பார்வைக்குள் இலங்கை..

## முளையிலேயே கிள்ளி எறியும் நிதானம் அரசுக்கு வேண்டும்









கவிஞனும் அணு விஞ்ஞானியும் இந்திய முன்னாள் ஜனாதிபதியுமான அப்துல் கலாம் , இலங்கை வந்திருந்தபோது, சுமார் அரை மணி நேரம் அலரி மாளிகையில் தொடக்கி வைக்கப்பட்ட மும்மொழி நிகழ்வில் சிங்களத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசினார்.

“நண்பர்களே! இந்த மேன்மை தங்கிய விழாவில் பங்கேற்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. நான் டெல்லியிலே இருந்து கொழும்பு நோக்கி விமானத்தில் பயணிக்கும்போது நான் உங்களுடன் இதைப்பற்றிப் பகிர்ந்து கொள்ளலாம் என்று சிந்தித்தேன்.

நண்பர்களே, எனக்குக் கவிதைகள் பிடிக்கும். அதனால் சுமார் 50 நிமிட விமானப் பறப்பு நேரத்தில் “இலங்கை இளைஞர்களின் கனவு”. எனும் ஒரு கவிதையை உங்களுக்காகப் படைத்தேன்.

**“எனக்குள் ஒரு கனவு இருந்தது**
**அது இன்னும் இருக்கிறது.**
**அது சமாதானத்துக்கான கனவு.**
**வெற்றி மேல் வெற்றி பெறும்**
**செழிப்புக்கான கனவு.**
**அது ஒரு பூரணச்சந்திர நோன்மதி**
**இரவின் குளுமையில்**
**தெய்வீகத்தன்மை வாய்ந்த**
**புனிதமான ஒளியில்**
**சூழ்ந்துள்ள கடலலைகளின்**
**ஓசையில்**
**இலங்கைத்தீவு முழுவதும்**
**கட்டுண்டு திளைத்திருந்தது.**
**வடக்கிற்கும் தெற்கிற்கும்**
**கிழக்கிற்கும் மேற்கிற்கும்**
**இடையேயான பயணம்**
**இரண்டு கோடி இதயங்களைத்**
**தொட்டு**
**நோவுகளையும் வலிகளையும்**
**ஆதரவு எனும் ஔசதத்தால்**
**அகற்றுகிறது.**

**அப்பொழுது தெய்வீக அசரீரி**
**ஒலிக்கிறது**
**“ஓ இலங்கைத் தாயின்**
**இளையவர்களே!**
**இறைவனின் அருளால்**
**நீங்கள் வழிகாட்டப்பட்டவர்களாக**
**இருக்க முடியும்.**
**இலங்கையராகிய நீங்கள்**
**அன்பு ஆதரவு எனும் ஒளிக்கதிரை**
**எங்கெங்கும் வீசச் செய்ய முடியும்.**
**இலங்கையின் ஒவ்வொரு**
**உள்ளங்களும்**
**அன்புடனும் ஆதரவுடனும்**
**வெற்றி மேல் வெற்றி பெறும்**
**செழிப்பையும்**
**சமாதானத்தையும் கொண்டு வர**
**முடியும்.”** என்று கூறிக்கொண்டிருந்தது.

என்று தனது கவிதை வரிகளை இலங்கையின் இளைஞர்களுக்காக அர்ப்பணித்திருந்தார்.

இதுவரை காலமும் இருந்து வந்த இன மத மொழி பேதங்களுக்கப்பால் இலங்கைச் சமூகம் இலங்கையர் என்ற அடிப்படையில் அரசியல் பயணத்தில் ஐக்கியமாய் அணிதிரண்டு 2024இல் சரித்திர சாதனை படைத்துள்ளார்கள்.



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

இலங்கை, பல சமூகங்கள் வாழும் நாடு என்ற பின்னணியில், இந்த ஆட்சியைத் தீர்மானிப்பதில் என்றும் இல்லாதவாறு எல்லா சமூக மக்களும் ஒன்றிணைந்து வாக்களித்து தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இலங்கை அரசியல் வரலாற்றில் அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து, ஓரணியில் நின்று மத்தியில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியை அமைக்கக்கூடிய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியமை இதுவே இலங்கைச் சரித்திரத்தில் முதல் முறை என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் நாடாளுமன்ற முறைமை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பு இலங்கையை ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்த காலத்தில், 1931ஆம் ஆண்டு இலங்கையில் அரசாங்க சபை உருவாக்கப்பட்டது.

அந்த நடைமுறை ஆரம்பிக்கப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்ற 2024ஆம் ஆண்டின் நவம்பர் 14ஆம் திகதி வரை இலங்கையில், இலங்கைச் சமூகத்தவர்கள் சிங்களம், தமிழ், முஸ்லிம் எனப் பிரிந்த நிலையிலேயே, மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளனர்.

ஆயினும், இந்த வரலாறு சமீபத்தில் 2024ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தலைகீழாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. வரலாற்றுக்கு மாற்றமாக சிங்களம், முஸ்லிம், தமிழ் மற்றும் மலையக பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் மத்தியில் ஆட்சி நடத்தக் கூடிய ஆட்சியாளர்களுக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

இலங்கையர்களாக ஒன்றிணைந்த மக்கள், இந்த வரலாற்றுச் சாதனையோடு மட்டும் தங்களது பயணத்தை நிறுத்திக் கொள்ளலாகாது என்பது இப்போது எழுந்துள்ள ஆதங்கம்.

ஏனென்றால், அப்படி நிறுத்திக் கொண்டுவிட்டால் அதுதான் வல்லாதிக்க, பிரித்தாளும் சக்திகளுக்கு தொடர்ந்து இந்த தேசத்தை பிளவுபடுத்தி கூறுபோட்டு சிதைத்து சின்னாபின்னப்படுத்த வாய்ப்பாக அமைந்து விடும்.

தேசத்தவர்கள் அனைவரும் இலங்கையர்களாக இணைந்து வரலாற்றுச் சாதனையைப் படைத்த மக்கள் இனி வரலாறு நெடுகிலும் இந்த சாதனையைத் தக்க வைத்துக் கொள்ள வழி தேட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையை கழுகுப் பார்வையில் உற்றுக் கவனிக்கும் வல்லாதிக்க சக்திகள் தொடர்ந்தும் இந்த வரலாற்றைத் தக்க வைக்க விட்டு விடுமா என்ற கேள்வி தூரநோக்குச் சிந்தனையாளர்களுக்கு எழத் துவங்கியுள்ளது நியாயமானதுதான்.

உலகில் அமைதியை விரும்பாத வல்லாதிக்க சக்திகள் இலங்கை மீது தங்களது கழுகுப் பார்வையைத் திருப்பி அமைதியைக் குலைப்பதற்கான சதிநாசகார வேலைகளில் கவனம்

> **இலங்கையர்களாக பொதுத் தேர்தலுக்கு ஒன்றிணைந்த மக்கள், இந்த வரலாற்றுச் சாதனையோடு மட்டும் தங்களது பயணத்தை நிறுத்திக் கொள்ளலாகாது என்பது இப்போது எழுந்துள்ள ஆதங்கம்!**

செலுத்தக் கூடும் என்பதே நோக்கர்களின் கவலை.

உலக அரசியல் ஒழுங்கில் இச்செயற்பாடுகள் உலகின் எல்லாப் பாகங்களிலும் காலங்காலமாக நடந்தேறியும் வந்துதானிருக்கின்றது. வல்லாதிக்க சக்திகள் இதனையே கையாண்டு வந்திருக்கின்றன.

நாடு பிடிப்பவர்களான ஐரோப்பியரும் இலங்கையை கையகப்படுத்தி ஆண்டபொழுது இந்த பிரித்தாளும் சூழ்ச்சி வழிமுறையைத்தான் கையாண்டார்கள்.

அதன் எச்ச சொச்சங்கள்தான் இன்றளவும் இனவாதமாக உருவெடுத்து நீறு பூத்த நெருப்பாக நீடித்து வந்திருக்கின்றது.

சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக சமூகத்தில் உருவாகும் பலமான சமூகங்கள் இணைந்த அரசியல் சக்திகளை உடைப்பதில் உள்ளூர் பேரினவாதிகளும் சர்வதேச வல்லாதிக்க சக்திகளும் வெற்றி கண்டிருக்கின்றன.

காலங்காலமாக இலங்கைச் சமூகங்கள் மத்தியில் பலவீனங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

தற்பொழுது அந்த வல்லாதிக்க சக்திகளின் முயற்சி தோல்வியடைந்திருக்கிறது. ஆனாலும், உள்நாட்டுப் பேரினவாத மற்றும் சர்வதேச வல்லாதிக்க சக்திகளின் பிரித்தாளும் சூழ்ச்சிகளுக்கு இலங்கைச் சமூகத்தவர்கள் இனிமேலும் துணைபோக வைக்கப்பட மாட்டார்கள் என்பதை அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. மனிதர்களை மனிதர்களாக மாத்திரம் மதிப்பளித்து ஒரே குடையின் கீழ் இணைப்பதற்கான பல்வேறு மனிதாபிமானச் சட்டங்களும் நியதிகளும் அடிப்படை உரிமைகளும் உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் முன்னேற்றம் அடைந்திருந்தாலும் இன்னமும் அவை சரிவரக் கடைப்பிடிக்கப்படுவதற்கு மனிதரிலே இயல்பாக ஊட்டப்பட்டுள்ள இழி குணங்கள் இடம்கொடுக்காததால் இங்கே குழப்பங்கள் நீடித்து வந்துள்ளன.

“பல்லின மக்கள் வாழும் நாட்டில் அல்லது பிரதேசத்தில் மோதல்களிலிருந்து விடுபடுவது எவ்வாறு என்பதும் அதற்கு இடமளிக்காத சமூக அரசியல் சூழலை உருவாக்குவது எவ்வாறு என்பதுமே முக்கியமாக அறியப்பட வேண்டிய வாழ்க்கைக் கலையாகும்” என இலங்கையில் இனக் கலவரங்களும், முஸ்லிம்களும்” என்ற நூலின் ஆசிரியர்களில் ஒருவரான கலாநிதி அனஸ் அந் நூலுக்கு எழுதிய முன்னுரையில் மேற்சொன்ன கருத்தை குறிப்பிட்டுள்ளார். இனக்கலவரம் ஒரு இலங்கைச் சமூகத்தின் பாரிய அழிவுக்கும், மீளமுடியாத பின்னடைவுக்கும் காரணமாய் அமைந்துவிட்டிருந்தது.

இனக்கலவரங்களால் சிறுபான்மையினரே மிகவும் பாதிப்புறுகிறார்கள் என்ற போதிலும் கூட அது பெரும்பான்மை சமூகத்தையும் ஏதோ ஒரு வகையில் பாதிப்படையச் செய்துதான் வந்துள்ளது.

இலங்கை மிக அதிகமாக இனக் கலவரங்களைக் கண்ட நாடு. பரஸ்பரம் பௌத்தர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் அவ்வப்போது மோதிக்கொள்ள வைக்கப்பட்டார்கள்.

பல இன சமூகங்களாக வாழும்போது இனக் கலவரங்களைத் தவிர்த்துக் கொள்வது எவ்வாறு என்பதுவே எல்லா இன மக்களும் பயில வேண்டிய அடிப்படைக் கலையாகும்.

குறிப்பாக புவியியல், மொழி, தொழில், பூர்வீக, பண்பாட்டு அடிப்படையில் கிட்டத்தட்ட ஒன்றாக உள்ள அம்சங்களோடு வாழும் சிங்கள, தமிழ் முஸ்லிம் சமூகங்கள் இந்த இணக்கப்பாட்டுடன் வாழும் கலையை கற்றுக் கொள்ள வேண்டும்.

அரசியல் காலங்களில் சிறுபான்மையிடமும் பெரும்பான்மையிடமும் இதுவரை காலமும் இருந்து வந்த ஒரே பொருள் வாக்கு வங்கி மட்டுமே. அதற்கு இப்போது முடிவுகட்டப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் சிங்களவர், முஸ்லிம், தமிழர், மலையகத்தவர், மலாயர் என்ற அனைத்து சமூகத்தவரும் ஒன்றிணைய முடியுமானால் அதுவே ஒரு பெரும் சக்தியாக இருக்கும்.

இணைவதற்கான பல காரணிகள் இருந்தும் துரதிஷ்டவசமாக சுதந்திரம் கிடைத்த நாளிலிருந்து இறுதியாக இந்த 2024 நவம்பர் 14இல் நாடாளுமன்றத் தேர்தல் நடக்கும் காலம் வரை இலங்கைச் சமூகங்களால் ஒன்றிணைய முடியாமலிருந்தது.

இலங்கைத் தேசத்தவர்களது இணைப்பு இந்த நாட்டைப் பலப்படுத்தி பேரினவாதிகளை தலைகுனியச் செய்யும். அதையும் தாண்டி இன்னும் கொஞ்சம் ஒருபடி மேலே சென்று மிகவும் தூரநோக்கத்துடன் பயன்படுத்தினால் இலங்கையரின் இணைவு என்பது இந்த நாட்டையே கட்டியெழுப்ப பெரிதும் பயன்படும்.

இலங்கை போரால் இழந்தவை ஒரு சிறுபகுதிதான், ஆனால் இலங்கையர்கள் ஒற்றுமையின்றிப் பிளவுபட்டு நின்று தமது பலவீனத்தால் இழந்தவைகள்தான் ஈடுசெய்ய முடியாதவை.

இனி, இலங்கைச் சமூகத்தவர்கள் அரசியல் தீர்வு விடயத்தில் எந்த தளம்பலும் அற்ற உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருக்க வேண்டும்.

மனித நேயத்தின் அடிப்படையில் இணக்கப்பாட்டுடன் கூடி வாழ இன்னமும் நாம் நிறையத் தியாகங்களைச் செய்து கற்றுக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

இத்தகைய அரசியல் முன்னெடுப்புகள் ஊடாக நாட்டில் நல்லிணக்கத்தைத் தோற்றுவிக்க முடியும் என்ற மிகுந்த நம்பிக்கை இன்னமும் இருக்கிறது.

சின்னாபின்னப்பட்டு சிதறிப்போயுள்ள இனங்களின் மனங்களை இணைப்பதற்கு எல்லோரும் மனம் திறந்து பாடுபடல் வேண்டும்.

அந்நியப்பட்டு நிற்றல் என்பது எப்போதும் இலங்கைச் சமூகத்தவருக்கு இந்த நாட்டில் அபாயத்தின் அறிகுறியாகவே இருக்கும்.

வல்லாதிக்க சக்திகள் தங்களுக்கு வாய்ப்புக்களை எதிர்பார்த்து நாட்டை மீண்டும் ஏதோவொரு வடிவத்தில் குழப்புவதற்கு தயாராய் திட்டமிடுவார்கள். அதனை நின்று நிதானித்து உற்றுக் கவனித்து முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். இதுவே, இப்போதுள்ள இணைந்துள்ள இலங்கை தேசத்தவர்களின் முழுமுதற் பணியாக இருக்க வேண்டும்.



# 2024 நாடாளுமன்

## கொழும்பு மாவட்டம் – இறுதி முடிவுகள்

| கட்சி | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 788,636 | 68.63% | 14 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 208,249 | 18.12% | 4 |
| புதிய ஜனநாயக முன்னணி | 51,020 | 4.44% | 0 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 34,880 | 3.04% | 0 |
| சர்வஜன அதிகாரம் | 24,746 | 2.15% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 1,765,351 | 1,211,738 | 62,613 | 1,149,125 |

## காலி மாவட்டம் – இறுதி முடிவுகள்

| கட்சி | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 406,428 | 68.07% | 7 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 93,486 | 15.66% | 1 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 31,201 | 5.23% | 1 |
| புதிய ஜனநாயக முன்னணி | 30,453 | 5.10% | 0 |
| சர்வஜன அதிகாரம் | 13,533 | 2.27% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 903,163 | 620,165 | 23,074 | 597,091 |

## மட்டக்களப்பு மாவட்டம் – இறுதி முடிவுகள்

| கட்சி | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| இலங்கை தமிழரசுக்கட்சி | 96,975 | 33.78% | 3 |
| தேசிய மக்கள் சக்தி | 55,498 | 19.33% | 1 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 40,139 | 13.98% | 1 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலி | 31,286 | 10.90% | 0 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 22,570 | 7.86% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 449,686 | 302,382 | 15,329 | 287,053 |

## கேகாலை மாவட்டம் – இறுதி முடிவுகள்

| கட்சி | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 312,441 | 64.80% | 7 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 109,691 | 22.75% | 2 |
| புதிய ஜனநாயக முன்னணி | 26,309 | 5.46% | 0 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 12,373 | 2.57% | 0 |
| சர்வஜன அதிகாரம் | 7,602 | 1.58% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 709,622 | 500,789 | 18,638 | 482,151 |

## ஹம்பாந்தோட்டை – இறுதி முடிவுகள்

| கட்சி | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 234,083 | 66.38% | 5 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 52,170 | 14.79% | 1 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 26,268 | 7.45% | 1 |
| புதிய ஜனநாயக முன்னணி | 18,297 | 5.19% | 0 |
| சர்வஜன அதிகாரம் | 5,564 | 1.58% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 520,940 | 369,700 | 17,039 | 352,661 |

## கண்டி மாவட்டம் – இறுதி முடிவுகள்

| கட்சி | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 500,596 | 64.60% | 9 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 145,939 | 18.83% | 2 |
| புதிய ஜனநாயக முன்னணி | 50,889 | 6.57% | 1 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 15,762 | 00.3% | 0 |
| சர்வஜன அதிகாரம் | 14,540 | 1.88% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 1,191,399 | 835,927 | 61,012 | 774,915 |

## கம்பஹா மாவட்டம் – இறுதி முடிவுகள்

| கட்சி | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 898,759 | 72.76% | 16 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 150,445 | 12.18% | 3 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 49,516 | 4.01% | 0 |
| புதிய ஜனநாயக முன்னணி | 47,512 | 3.85% | 0 |
| சர்வஜன அதிகாரம் | 25,939 | 2.10% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 1,881,129 | 1,306,952 | 71,640 | 1,235,312 |

## நுவரெலியா மாவட்டம் – இறுதி முடிவுகள்

| கட்சி | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 161,167 | 41.57% | 5 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 101,589 | 26.21% | 2 |
| ஐக்கிய தேசிய கட்சி | 64,672 | 16.68 | 1 |
| ஐக்கிய ஜனநாயகக் குரல் | 18,606 | 4.80% | 0 |
| சுயேட்சை குழு 6 | 6,895 | 1.78% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 605,292 | 429,851 | 42,195 | 387,656 |

## மாத்தறை மாவட்டம் – இறுதி முடிவுகள்

| கட்சி | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 317,541 | 69.83% | 6 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 74,475 | 16.38% | 1 |
| புதிய ஜனநாயக முன்னணி | 31,009 | 6.82% | 0 |
| சர்வஜன அதிகாரம் | 11,776 | 2.59% | 0 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 9,432 | 2.07 | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 686,175 | 476,407 | 21,673 | 454,734 |

## பொலன்னறுவை மாவட்டம் – இறுதி முடிவுகள்

| கட்சி | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 159,010 | 68.67% | 4 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 43,822 | 18.92% | 1 |
| சர்வஜன அதிகாரம் | 8,587 | 3.71% | 0 |
| புதிய ஜனநாயக முன்னணி | 5,153 | 2.23% | 0 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 4,646 | 2.01% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 351,302 | 240,145 | 8,586 | 231,559 |

## வன்னி மாவட்டம் – இறுதி முடிவுகள்

| கட்சி | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 39,894 | 20.37% | 02 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 32,232 | 16,45% | 01 |
| இலங்கை தமிழரசுக்கட்சி | 29,711 | 15.17% | 01 |
| ஜனநாயக தமிழ் தே.முன்னணி | 21,102 | 10.77% | 01 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | 17,710 | 9.04% | 01 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 306,081 | 211,140 | 15,254 | 195,886 |

## பதுளை மாவட்டம் – இறுதி முடிவுகள்

| கட்சி | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 275,180 | 58.59% | 06 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 102,958 | 21.92% | 02 |
| புதிய ஜனநாயக முன்னணி | 36,450 | 7.76% | 01 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 11,255 | 2.4% | 00 |
| ஐக்கிய ஜனநாயகக் குரல் | 9,656 | 2.06% | 00 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 705,772 | 503,724 | 34,018 | 469,706 |

## ஒரே
## தேர்தல்

- தேசிய மக்கள்
- ஐக்கிய மக்க
- புதிய ஜனநாய
- ஸ்ரீலங்கா பொது
- இலங்கை தமிழ
- ஸ்ரீலங்கா முஸ்

| பதிவு.செ. வாக்குகள் | அளிக் |
|---|---|
| 17,140,354 | 11,… |

# தேர்தல் – மாவட்ட முடிவுகள்



## அநுராதபுரம் மாவட்டம் – இறுதி முடிவுகள்

| | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 331,692 | 67.22% | 7 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 98,176 | 19.90% | 2 |
| புதிய ஜனநாயக முன்னணி | 29,961 | 6.07% | 0 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 11,248 | 2.28% | 0 |
| சர்வஜன அதிகாரம் | 6,008 | 1.22% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 741,862 | 522,533 | 29,115 | 493,418 |

## யாழ்ப்பாணம் மாவட்டம் – இறுதி முடிவுகள்

| | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 80,830 | 24.85% | 3 |
| இலங்கை தமிழரசுக்கட்சி | 63,327 | 19.47% | 1 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 27,986 | 8.60% | 1 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 27,855 | 8.56% | 1 |
| ஜனநாயக தமிழ் தேசமுன்னணி | 22.513 | 6.92% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 593,187 | 358,079 | 32,767 | 325,312 |

## இரத்தினபுரி மாவட்டம் – இறுதி முடிவுகள்

| | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 368,229 | 61.75% | 8 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 133,041 | 22.31% | 3 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 29,316 | 4.92% | 0 |
| புதிய ஜனநாயக முன்னணி | 26,171 | 4.39% | 0 |
| சர்வஜன அதிகாரம் | 10.485 | 1.76% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 923,736 | 633,440 | 37,070 | 596,370 |

## களுத்துறை மாவட்டம் – இறுதி முடிவுகள்

| | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 452,398 | 68.09% | 8 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 128,932 | 18.84% | 2 |
| புதிய ஜனநாயக முன்னணி | 34,257 | 5.00% | 1 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 27,072 | 3.96% | 0 |
| சர்வஜன அதிகாரம் | 13,564 | 1.98% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 1,024,244 | 721,461 | 36,969 | 684,492 |

## குருநாகல் மாவட்டம் – இறுதி முடிவுகள்

| | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 651,476 | 69.56% | 12 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 189,394 | 20.22% | 3 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 35,236 | 3.76% | 0 |
| புதிய ஜனநாயக முன்னணி | 30,073 | 3.21% | 0 |
| சர்வஜன அதிகாரம் | 9,999 | 1.07% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 1,417226 | 978,927 | 42,312 | 936,615 |

## திகாமடுல்லை மாவட்டம் – இறுதி முடிவுகள்

| | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 146,313 | 40.32% | 4 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 46,899 | 12.92% | 1 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | 33,911 | 9.34% | 1 |
| இலங்கை தமிழரசுக்கட்சி | 33,632 | 9.27% | 1 |
| புதிய ஜனநாயக முன்னணி | 33,544 | 9.24% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 555,432 | 380,523 | 17,599 | 362,934 |

## மாத்தளை மாவட்டம் – இறுதி முடிவுகள்

| | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 181,678 | 66.16% | 4 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 53,200 | 19.37% | 1 |
| புதிய ஜனநாயக முன்னணி | 13,553 | 4.86% | 0 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 10,150 | 3.70% | 0 |
| சர்வஜன அதிகாரம் | 3,312 | 1.21% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 429,991 | 297,238 | 22,637 | 274,601 |

# பார்வையில் முடிவுகள் 2024

| | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் | போனஸ் ஆசனங்கள் |
|---|---|---|---|---|
| தி | 6,863,186 | 61.56% | 141 | 18 |
| சக்தி | 1,968,716 | 17.66% | 35 | 5 |
| முன்னணி | 500,835 | 4.49% | 3 | 2 |
| ன பெரமுன | 350,429 | 3.14% | 2 | 1 |
| க்கட்சி | 257,813 | 2.31% | 7 | 1 |
| ம் காங்கிரஸ் | 87,038 | 0.78% | 2 | 1 |

| ப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|
| 15,246 | 667,240 | 11,148,006 |
| 68.93 | 5.65% | 94.35% |

## மொனராகலை மாவட்டம் – இறுதி முடிவுகள்

| | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 174,730 | 64.27% | 5 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 62,014 | 22.81% | 1 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 11,624 | 4.28% | 0 |
| புதிய ஜனநாயக முன்னணி | 10,697 | 3.93% | 0 |
| சர்வஜன அதிகாரம் | 3,455 | 1.27% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 399,166 | 284,847 | 12,991 | 271,856 |

## புத்தளம் மாவட்டம் – இறுதி முடிவுகள்

| | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 239,576 | 63.10% | 6 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 65,679 | 17.30% | 2 |
| புதிய ஜனநாயக முன்னணி | 15,741 | 4.15% | 0 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | 14,624 | 3.85% | 0 |
| ஐக்கிய ஜனநாயகக் குரல் | 9,490 | 2.50% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 663,673 | 410,853 | 31,172 | 379,681 |

## திருகோணமலை மாவட்டம் – இறுதி முடிவுகள்

| | அளிக்கப்பட்ட வாக்குகள் | சதவீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 87,031 | 42.48% | 2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 53,058 | 25.90% | 1 |
| இலங்கை தமிழரசுக்கட்சி | 34,168 | 16.68% | 1 |
| புதிய ஜனநாயக முன்னணி | 9,387 | 4.58% | 0 |
| ஜனநாயக தேசிய கூட்டணி | 4,868 | 2.38% | 0 |

| பதிவு.செ. வாக்குகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட | செல்லுபடியாகும் வாக்குகள் |
|---|---|---|---|
| 315,925 | 218,425 | 13,537 | 204,888 |

# அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக ஜமீல் அறிவிப்பு

(எம்.எப். றிபாஸ்)

புதிய ஜனநாயக முன்னணி சார்பாக சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எம்.ஜமீல் தனது நேரடி அரசியல் செயற்பாட்டில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றிகளை தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எனது கடந்த கால செயற்பாடுகளையும் சமூக முன்னேற்றத்திற்காக தான் ஆற்றிய பணிகளையும் கருத்தில் எடுத்து எனக்காக வாக்களித்த மக்களுக்கு இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கான தேர்தல் பிரசாரங்களில் மாவட்டம் பூராவும் இரவு, பகலாக அர்ப்பணிப்புடன் களப் பணியாற்றிய செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும் விசேடமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.



மாணவப் பருவத்திலிருந்தே சமூகப் பணியில் செயலாற்றி வந்த நான் எனது சாய்ந்தமருது மண்ணுக்கும், கல்முனை தொகுதிக்கும் முழு அம்பாறை மாவட்டத்திற்கும் அரசியல் அதிகாரத்தின் ஊடாக முடியுமானளவு தொண்டாற்ற வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் இத்தேர்தலில் களமிறங்கியிருந்தேன்.

கல்முனை தொகுதியின் பிரதிநிதித்துவம் இழக்கப்போகும் அபாயத்தை உணர்ந்தே உடல் நலம் முழுமையாக தேறாத நிலையிலும் இறுதி நேரத்தில் வேட்புமனுவில் கையெழுத்திட்டு மக்கள் மன்றத்தில் தோன்றி – அரசியல் கள நிலைவரங்களை எடுத்துக் கூறி மன்றாடினேன். நாட்டில் மாற்றத்தையும் மறுமலர்ச்சியும் எதிர்பார்த்த அதிகமான மக்கள் ஜனாதிபதி தலைமையிலான கட்சிக்கு வாக்களித்து கல்முனை தொகுதிக்கான நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்து விட்டு, கைசேதப்பட்டு புலம்பிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். எமக்கு தெளிவான வெற்றிவாய்ப்பு காத்திருந்தும் சிலரது பிழையான வழிகாட்டல் காரணமாக எம்மைப் புறந்தள்ளி விட்டு, மாற்றம் வேண்டி வாக்களித்ததனால் நமக்கான பிரதிநிதித்துவத்தை பறிகொடுக்கும் வரலாற்றுத் தவறை செய்து விட்டோம் என்று இப்போது கைசேதப்படுவதில் பயனில்லை.

மேலும், எனது வெற்றிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உத்தரவாதமளித்து விட்டு இறுதி நேரத்தில் கழுத்தறுப்புச் செய்தவர்களின் துரோகத்தனத்தை இறைவனிடமே பாரம்சாட்டுகின்றேன்.

எவ்வாறாயினும் எனது அரசியல் வகிபாகத்தை நிராகரித்த மக்களின் நிலைப்பாட்டை மனமுவந்து ஏற்றுக் கொள்கிறேன்" எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தமிழரசு கட்சியின் ஊடாக மீண்டும் கோடீஸ்வரன் எம்.பியானார்

(வடிவேல் டினேஸ்)

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தமிழரசு கட்சியின் ஊடாக 11ஆயிரத்து 962 விருப்பு வாக்குகளை பெற்று நாடாளுமன்ற பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடாக முதன் முறையாக போட்டியிட்டு 17 ஆயிரத்து 779 விருப்பு வாக்குகளை பெற்று மக்கள் பிரதி நிதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

2020 நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழரசு கட்சி மற்றும் அகில இலங்கை தமிழர் மகா சபை (கருணா) ஆகிய இரு கட்சிகள் போட்டியிட்ட போது 25 ஆயிரத்து 225 வாக்குகளை பெற்று தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆசனங்கள் எதுவும் பெறாமல் தோல்வியை தழுவியது.



5 வருட காலம் திகாமடுல்ல தமிழர்கள் அரசியல் அநாதைகளாக அரசியல் ரீதியில் காணப்பட்டது. இதன் பின்னர், நடை பெற்ற பொதுத் தேர்தலில் தமிழரசு கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் மக்கள் விடுதலை புலிகள், உள்ளிட்ட தமிழ் கட்சிகள் போட்டியிட்டன. இறுதி முடிவுகளின் அடிப்படையில் தமிழரசு கட்சி 33,632 வாக்குகள் புதிய ஜனநாயக முன்னணி 33,544 (சிலிண்டர்) இரண்டிற்கு இடையில் ஒரு ஆசனத்தை பெறுவதற்கான போட்டி நிலை காணப்பட்டது. முடிவில் 88 வாக்குகள் அதிகம் பெற்று இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஒரு ஆசனத்தை கைப்பற்றியது.

## வீடியோ பதிவு தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு

(காத்தான்குடி நிருபர்)

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பிர்தௌஸ் நளீமிக்கு எதிராகவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தொடர்பிலும் காத்தான்குடியின் பிரமுகர்கள் சிலர் தொடர்பாகவும் தேர்தலுக்கு ஒரிரு தினங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட வீடியோ பதிவு தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவில் வேட்பாளர் பிர்தௌஸ் நழீமியினால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இம்முறைப்பாட்டை பிர்தௌஸ் நளீமி (12.11.2024) செவ்வாய்க்கிழமை இரவு முறைப்பாடு செய்தார்.

குறித்த வீடியோவை தயாரித்தவர்கள், சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியவர்கள், பகிர்ந்தவர்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் இம்முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது .

இம்முறைப்பாட்டினைத் தொடர்ந்து பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த வீடியோவில் பிரதமருக்கும் அவதூறு செய்துள்ளதால் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# நில உரிமை தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு



கிழக்கு மாகாணத்தில் நில மீட்புக்கான செயற்றிட்டத்தின்கீழ் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு, நில உரிமை தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு திருகோணமலை சர்வோதயம் கேட்போர் கூடத்தில் நேற்று (17) நடைபெற்றது.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் அனுபவித்து வரும் காணிப் பிணக்கு தொடர்பான தெளிவு, காணி பிணக்குக்கு தீர்வை பெறக் கூடிய வழிமுறைகள், காணி உரிமை தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன. காணிப் பிணக்கு தொடர்பான தெளிவுகள் தொடர்பாக, அகம் மனிதாபிமான வள நிலையம் செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தது.

செயலமர்வில் திருகோணமலை மாவட்டத்தில் அதிக காணி பிணக்குகள் உள்ள மூதூர், குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த காணி உரிமைகளை இழந்தோர், இளைஞர்கள், சிவில் அமைப்பினர்கள் கலந்து கொண்டு தெளிவுகளை பெற்றுக் கொண்டனர். இப் பயிற்சிநெறியில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் பிரதி இணைப்பாளர் அ.மதன் ,சட்டத்தரணிகள், அகம் மனிதாபிமான வள நிலையத்தின் உதவிக் கணக்காளர் கு.சஞ்சலிதா, கள இணைப்பாளர் சி.லீனா ஆகியோர் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திகாமடுல்ல மாவட்டம் : இலங்கை தமிழரசு கட்சி

(வடிவேல் டினேஸ்)

**திகாமடுல்ல மாவட்டத்தில் இலங்கை தமிழரசு கட்சி வேட்பாளர் பெற்றுக் கொண்ட விருப்பு வாக்குகள் விபரம் வருமாறு**

கவீந்திரன் கோடீஸ்வரன் 11 ஆயிரத்து 962
கந்தசாமி இந்துநேஷ். 10 ஆயிரத்து 744
தவராசா கலைஅரசன் 5 ஆயிரத்து 231
கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் 4 ஆயிரத்து 906
பேந்திரராஜா ஜெயசுதன் 3 ஆயிரத்து 216
அருள்ஞானமூர்த்தி நிதான்சன் 2 ஆயிரத்து 950
கனகரெத்தினம் ஜனார்த்தனன் 2 ஆயிரத்து 254
பேரின்பராஜா ஜீவராஜ் ஆயிரத்து 294
ஜெயக்குமார் யசோதரன் 545
பாக்கியம் மஞ்சுளா 528

**தொகுதி வாரியாக இலங்கை தமிழரசு கட்சி பெற்றுக் கொண்ட வாக்குகள்**

அம்பாறை தொகுதி 23 வாக்குகள்
பொத்துவில் தொகுதி 20 ஆயிரத்து 325 வாக்குகள்
சம்மாந்துறை தொகுதி 5 ஆயிரத்து 265
கல்முனை தொகுதி 6 ஆயிரத்து 120
தபால் மூல வாக்கு ஆயிரத்து 899
மொத்தமாக 33 ஆயிரத்து 632 வாக்குகள்.

## கல்முனை மாநகர சபை

# நீரிணைப்பு பெற சேதமாக்கிய வீதிகளை திருத்தாதது ஏன்?

(முகம்மட் முக்தார்)

புதிய நீர் இணைப்பு வழங்குவதற்காக சேதமாக்கப்பட்ட வீதிகளை கல்முனை மாநகர சபையினர் திருத்தாமை காரணமாக பாதசாரிகளும், வாகன ஓட்டிகளும் பல்வேறு சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

புதிய நீர் இணைப்புக்களை நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து பெறுவதற்காக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட வீதிகள் சேதமாக்கப்படுகின்றன.

இவ்வாறு சேதமாக்கப்படும் வீதிகளை மீளவும் செப்பனிடுவதற்காக கல்முனை மாநகர சபைக்கு மக்கள் கட்டணம் செலுத்துகின்ற போதும் சேதமாக்கப்படும் வீதிகள் மீளவும் செப்பனிடப்படாது உள்ளது. நீர் இணைப்புக்காக சேதமாக்கப்படும் வீதிகளை நீர் இணைப்பை பெறுவோர், தாமாகவே செப்பனிடப்பட்ட வீதிகளை மீளவும் செப்பனிடப்பட்டால் அறவிடப்படும் பணத்தை மீளவும் செலுத்தும் நடை முறை கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் தற்போது அந்நடை முறை பின்பற்றப்படுவதில்லையெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் பொதுமக்களிடமிருந்து அறவிடப்படும் வீதி திருத்தத்திற்காக அறவிடப்படும் பணத்திற்கு என்ன நடைபெறுகிறது என்பதை அறிய முடியாத நிலையில் மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

## திருகோணமலை மாவட்டம்

# நாடாளுமன்றம் தெரிவானோர், தோல்வியடைந்தோர் விபரம்

(கியாஸ் ஷாபி)

இலங்கையின் 10வது நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளின் பிரகாரம், திருகோணமலை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்த அதேவேளை தோல்வியடைந்தோர் விபரம் வருமாறு,

ஐக்கிய மக்கள் சக்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில், போட்டியிட்டவர்கள் தோல்வியை தழுவிக் கொண்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.ஜே. எம்.லாஹிர் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் கிண்ணியா நகர சபை முன்னாள் தவிசாளர் ஹில்மி மஹ்ரூப் ஆகியோரே தோல்வியை தழுவிக் கொண்டவர்களாவர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.எஸ். தௌபீக் இதுவரை, போட்டியிட்ட நாடாளுமன்ற தேர்தல்களில், 3 வெற்றிகளையும் 4 தோல்விகளையும் சந்தித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் இவரது அரசியல் பயணம் ஆரம்பமானது. எனினும், 2001 மற்றும் 2004 ஆண்டு நடத்தப்பட்ட இரு நாடாளுமன்ற தேர்தல்களில் தோல்வி அடைந்தார். மேலும், 2010 இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி அடைந்த இவர், 2015 இல் தோல்வியை தழுவிக்கொண்டார்.

மீண்டும் 2020 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற இவர், 2024 இல் நடைபெற்ற தேர்தலில் பெற முடியவில்லை.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில், தற்போது நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில், வெறும் 1230 வாக்குகளையே சர்வஜன அதிகாரக் கட்சி பெற்றுக்கொண்டது.

இந்தக் கட்சியின் தலைமை வேட்பாளராக, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக்கோரலயும் தேர்தலில் தோல்வியடைந்துள்ளார். இவர், 2020 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, முதன் முறையாக நாடாளுமன்றம் சென்றமை குறிப்பிடத்தக்கது. இந்த தேர்தலில், 9387 வாக்குகளைப் பெற்றுக் கொண்ட புதிய ஜனநாயக முன்னணி ஆசனங்கள் எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை. இதன் தலைமை வேட்பாளராக போட்டியிட்ட, முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் தோல்வியடைந்துள்ளார்.









2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற இவர், 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், தோல்வியை தழுவிக்கொண்டார்.

மீண்டும் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபை தேர்தலில், தோல்வியடைந்த இவர், 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று, துறை முகங்கள் மற்றும் கப்பல் துறை பிரதியமைச்சராகவும் பதவி வகித்தார்.

இறுதியாக, 2020 ஆம் ஆண்டும், 2024 ஆம் ஆண்டும் நடைபெற்ற இரு நாடாளுமன்ற தேர்தல்களிலும் இவர், தொடர்ச்சியாக மக்களால் நிராகரிக்கப்பட்டார்.

ஜனநாயக தேசிய கூட்டணியில் போட்டியிட்ட, முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எச்.எம்.எம். பாயிஸ்/ம் தோல்வியடைந்துள்ளார். இவர் முதல் தடவையாக நாடாளுமன்ற தேர்தலில் இம்முறை போட்டியிட்டிருந்தார்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி, இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. இந்த கட்சியின் மூலம், அருண் ஹேமசந்திரா மற்றும் ரொஷான் பிரியசஞ்சன ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நாடாளுமன்றம் செல்லும் மாவட்ட மக்களின் புதிய பிரதிநிதிகளாகும்.

ஐக்கிய மக்கள் சக்தி ஒரு ஆசனத்தைக் கைப்பற்றியது. இம்ரான் மஹ்ரூப் இந்தக் கட்சியிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் தொடர்ச்சியாக 3வது தடவையாகவும் நாடாளுமன்றம் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒரு ஆசனத்தை கைப்பற்றியது. சண்முகம் குகதாசன் இந்த கட்சியில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முதல் தடவையாக, 2020 ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த இவர், கடந்த ஜூன் மாதம் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்மந்தனின் மறைவை அடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, முதல் தடவையாக நாடாளுமன்றத்துக்கு செல்லும் சந்தர்ப்பத்தை பெற்றுக் கொண்டார்.இந்த மாவட்டத்தில் நான்கு ஆசனங்களை தெரிவு செய்வதற்காக, 17 அரசியல் கட்சிகள் மற்றும் 14 சுயேச்சை குழுக்களிலிருந்தும் மொத்தமாக 217 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

# தேசிய அரசியலில் வரலாறு படைத்த கண்டி

(எம்.ஏ.அமீனுல்லா)

பத்தாவது நாடாளுமன்றத்திற்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நடைபெற்ற தேர்தலில் கண்டி மாவட்டத்திலும் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றியீட்டியுள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அதிக எண்ணிக்கையும் அதிக விருப்பு வாக்குகளையும் பெற்ற ஒரு தனி அரசியல் கட்சியாகவும் தேசிய மக்கள் சக்தி வரலாறு கண்டுள்ளது .

கண்டி மாவட்டத்தில் உள்ள 13 தேர்தல் தொகுதிகளிலும் 11 இலட்சத்து 91,399 வாக்காளர்களை மையப்படுத்தி, 12 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்காக 22 பிரதான அரசியல் கட்சிகள் மற்றும் 12 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 510 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்த நிலையிலே இவ்வாறு தேசிய மக்கள் சக்தி கண்டி மாவட்டத்தில் 500,596 (64.6%) வாக்குகளை சுவீகரித்து 09 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுள்ளது.

கண்டி அரசியல் வரலாற்றில் விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ் ஒரு அரசியல் கட்சி அதிக விருப்பு வாக்குகளுடன் அதிகூடிய 9 ஆசங்களைப்பெற்று நாடாளுமன்றத்திற்கு செல்லும் சந்தர்ப்பம் இதுவாகும். மேலும் அக்கட்சிக்கே போனஸ் ஆசனம் ஒன்றும் கிடைக்கப்பற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மிகுதி மூன்று ஆசனங்கள், ஐக்கிய மக்கள் சக்தி 145,939 (18.8%) வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களையும் புதிய ஜனநாயக முன்னணி 50,889 (6.6%) வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனமாக மொத்தம் 12 உறுப்பினர்கள் இம்முறை கண்டி மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு செல்கின்றனர்.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார் மற்றும் எம்.எச் ஏ. ஹலீம் ஆகியோர் இம்முறை தோல்வியடைந்துள்ளனர். கண்டியில் இம்முறை போட்டியிட்ட பாரத் அருள்சாமி நாடாளுமன்றம் செல்லும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளார்.

மேலும் முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, திலும் அமுனுகம, எம்.எச். ஏ ஹலீம் ஆகியோர் தமது நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்துள்ளனர் . இம்முறை கண்டி மாவட்டத்தில் முஸ்லிம் சமூகத்திலிருந்து மூவர் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ள போதிலும் தமிழ் சமூகத்திலிருந்து ஒருவரேனும் தெரிவுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

# மாத்தளை மாவட்டத்தில் நான்கு புதுமுகங்கள்

(எம். எஸ். எம். மஸாஹிம்)



நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் மாத்தளை மாவட்டத்தில் நான்கு புது முகங்களோடு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி தேசிய மக்கள் சக்தியிலிருந்து கமகெதர திசாநாயக்க 100,618 விருப்பு வாக்குகளையும் சுனில் பியன்வில 56,932 விருப்பு வாக்குகளையும் தீப்தி நிரன்ஜலா வாசலகே 47,482 விருப்பு வாக்குகளையும் தினேஸ் ஹேமந்த பெரேரா 43,458 விருப்பு வாக்குகளையும் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன 27,745 விருப்பு வாக்குகளைப் பெற்று மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை மாவட்டத்திலிருந்து தீப்தி நிரன்ஜலா வாசலகே மற்றும் ரோஹினி குமாரி கவிரத்ன ஆகிய இரு பெண் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்குப் பிரவேசிப்பது இதுவே முதல் தடவையாகும்.



இரத்தினபுரி, ஹபுகஸ்தென்னை கலைமகள் தமிழ் வித்தியாலயம் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட நடன,சங்கீத போட்டிகளில், மீனவ நடனத்தில் முதலாம் இடத்தை பெற்று பாடசாலைக்கும் பிரதேசத்துக்கும் பெருமை சேர்த்துள்ளது. பயிற்றுவித்த ஆசிரியர்களுடன் வெற்றிபெற்ற மாணவ,மாணவிகளைப் படத்தில் காணலாம்.

# தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள் பாற்சோறு வழங்கி கொண்டாட்டம்

(டி.சந்ரு செ.திவாகரன்)

இலங்கையின் 10வது நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களைக் கைப்பற்றி வரலாற்று சாதனையைப் படைத்ததை முன்னிட்டு நானுஓயா கிரிமிட்டி பகுதியில் அமைதியான முறையில் வெற்றிக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

சனிக்கிழமை (16) மாலை நானுஓயா டெஸ்போட் கிரிமிட்டி ஆலயத்திற்கு முன்பாக தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களால் பொதுமக்களுக்கு பாற்சோறும், இனிப்பு பண்டங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், நுவரெலியா மாவட்ட அமைப்பாளருமான மூக்கையா பாஸ்கர் இணைந்து கொண்டு தேர்தலில் வாக்களித்தவர்களுக்கு நன்றி தெரிவித்தார். நிகழ்வில் குறித்த பகுதிகளில் வசிக்கும் ஏராளமான கட்சியின் முக்கிய உறுப்பினர்களும் , ஆதரவாளர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மனிதக் கழிவுகளை வீச வந்த நபர் பொதுமக்களால் மடக்கிப்பிடிப்பு

வவுனியா தாண்டிக்குப்பகுதியில் மனிதக் கழிவுகளை வீசுவதற்கு வந்த நபர் ஒருவர் இளைஞர்களால் மடக்கிபிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டதுடன் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சனிக்கிழமை(16) மாலை நபர் ஒருவர் துவிச்சக்கரவண்டி ஒன்றில் மலர்ச்சாலையில் சடலங்களிலிருந்து அகற்றப்படும் கழிவுப்பொதியுடன் தாண்டிக்குளம் குளப் பகுதிக்குச் சென்றுள்ளார். இதனைத் தொடர்ச்சியாக அவதானித்து வந்த இளைஞர்கள் சிலர் அவரை மடக்கிப்பிடித்து நையப்புடைத்ததுடன், அந்தப் பகுதி கமக்காரர் அமைப்பிற்குத் தகவல் வழங்கியிருந்தனர்.

சம்பவ இடத்திற்குச்சென்ற கமக்காரர் அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் விடயம் தொடர்பாக வவுனியா பொலிசார் மற்றும் சுகாதார பிரிவிற்குத் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிசார் குறித்த நபரைக் கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசெல்ல முயன்றபோது அதற்கு எதிர்ப்பு தெரிவித்த பொதுமக்கள் மலர்ச்சாலையின் உரிமையாளர் வரும் வரையில் வாகனத்தை நகர விடமாட்டோம் என போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் குறித்த பகுதியில் குழப்பநிலை ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறித்த சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணை செய்து குற்றவாளியை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதாக பொதுமக்களுக்கு உறுதியளித்தார்.

இதனையடுத்து பொதுமக்கள் அந்தப் பகுதியிலிருந்து அகன்று சென்றனர். இதேவேளை குறித்த கழிவுகளை வவுனியா கண்டி வீதிக்கு அண்மையில் உள்ள மலர்ச்சாலை ஒன்றிலிருந்தே எடுத்து வந்ததாக அதனைக் கொண்டுவந்த நபர் பொதுமக்களுக்குத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட நபர் அவர் கொண்டுவந்த கழிவுப்பொதிகளுடன் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

# வன்னியில் அதிகரித்துள்ள நிராகரிக்கப்பட்ட வாக்குகள்

(கி.வசந்தன்)

வன்னியில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தபால் மூல வாக்குகள் 466 உட்பட 15,254 வாக்குள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார். வவுனியா, மன்னார், முல்லைத்தீவு உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் 3 இலட்சத்து 6 ஆயிரத்து 81 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இம்முறை தேர்தலில் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 140 பேர் வாக்களித்தனர். அதில் தபால் மூல வாக்களிப்பு 466 உட்பட 15,254 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், 1 இலட்சத்து 95 ஆயிரத்து 886 வாக்குகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கிணற்றில் வீழ்ந்து 8 வயது சிறுவன் பலி!

(கி.வசந்தன்)



வவுனியா கள்ளிக்குளம் பகுதியில் 8 வயது சிறுவன் பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து மரணமாகியுள்ளான். குறித்த சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

குறித்த சிறுவன் கிணற்றுப்பகுதிக்கு தண்ணீர் எடுக்கச்சென்றதாகவும் இதன்போது பாதுகாப்பற்ற அந்த கிணற்றில் அச்சிறுவன் தவறி உள்ளே விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. உறவினர்களால் சிறுவன் மீட்கப்பட்ட போதும் அவன் உயிரிழந்து காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் கள்ளிக்குளம் பகுதியை சேர்ந்த க.டிலக்சன் என்ற 8 வயதான சிறுவனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான். சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழில் கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் சுற்றிவளைப்பு



வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை தெற்கு, நெல்லியான் பகுதியில் உள்ள கசிப்பு உற்பத்தி செய்யும் இடம் ஒன்று நேற்றுமுன்தினம் (16)வட்டுக்கோட்டை பொலிஸாரால் சுற்றிவளைப்பு செய்யப்பட்டது.

இதன்போது 166 லீற்றர் கோடா, 10.5 லீற்றர் கசிப்பு என்பவற்றுடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய இரண்டு பெரிய கொள்கலன்கள், இரண்டு செப்புப் சுருள் என்பவற்றுடன் 21 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி சி.ஐ.கொஸ்தா தலைமையின் கீழ் இயங்கும் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவு, போதைப்பொருள் தடுப்பு பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய பொலிஸ் குழுவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ் எம்பிக்கள் ஒன்றிணைந்து ஒரே அணியாக செயற்படுவோம்

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு




தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றிணைந்து நாடாளுமன்றத்தில் ஒரே அணியாக பொது பிரச்சினைகளை நாங்கள் கையாளுகின்ற வகையிலே செயல்பட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

-மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை(16) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை நாடாளுமன்ற தேர்தலின் போது தெரிவு செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து நாடாளுமன்றத்தில் ஒரே அணியாக பொது பிரச்சினைகளை நாங்கள் கையாளுகின்ற வகையிலே செயல்பட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளேன். ஜனாதிபதி கூறியது போல் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்து,காணாமல் போனவர்கள் குறித்து அவர்களின் உறவுகள் போராட்டத்தின் ஊடாக நீதியை கோரி வருகின்றனர்.

அவர்களுக்கு நியாயம் கிடைக்கின்ற வகையில் ஒரு வழி முறையை நாங்கள் கையாளுகின்ற ஒரு சூழலை உருவாக்குதல்,எமது நிலங்கள் பறிபோகாத ஒரு சூழலை ஏற்படுத்துதல்,எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளோம் என தெரிவித்தார்.



## மணிப்பூரில் மீண்டும் பதற்றம்

# ஆறு பேர் சடலங்களாக மீட்பு

## முதலமைச்சர் வீட்டின் மீதும் தாக்குதல்

மணிப்பூரில் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், முதலமைச்சர் என். பிரேன் சிங் மற்றும் அவரது மருமகன் ஆகியோரின் தனியார் வீடுகள் மீது போராட்டகாரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும், இந்த தாக்குதலிக் போது, முதலமைச்சர் இல்லத்தில் இல்லை எனவும் முதல்வர் மற்றும் அவரது குடும்பத்தினர் பாதுகாப்பாக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், போராட்டகாரர்களின் கூட்டத்தை கலைக்க பாதுகாப்பு படையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். பல்வேறு இடங்களில் வீடுகள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மணிப்பூரின் ஜிரிபாம் மாவட்டத்தில் காணாமல் போன மைதேயி பிரிவைச் சேர்ந்த ஆறு பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டதை அடுத்து மாநிலத்தில் பதற்றம் தீவிரமானியுள்ளது.

முன்னதாக, கொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி கோரி மைதேயி இனத்தை சேர்ந்தவர்கள் இரண்டு அமைச்சர்கள் மற்றும் மூன்று சட்ட மன்ன உறுப்பினர்களின் வீடுகளைத் தாக்கினர்.

எவ்வாறாயினும், வன்முறை காரணமாக இம்பால் மேற்கு, இம்பால் கிழக்கு மற்றும் பிஷ்ணுபூர் மாவட்டங்களில் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஏழு மாவட்டங்களில் இணைய சேவைகளும் தடை செய்யப்பட்டுள்ளன. காணாமல் போனவர்களை கொலை செய்த குற்றவாளிகளை 24 மணி நேரத்திற்குள் கைது செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜிரிபாம் உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களில் பாடசாலை, கல்லூரி களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது. சமீபகாலமாக மணிப்பூரில் மீண்டும் இரு குழுவினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டு வருகிறது.

ஜிரிபாம் மாவட்டத்தில் பழங்குடியின இளம்பெண் சமீபத்தில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு வன்முறையாளர்களால் எரித்துக் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஜிரிபாம் பகுதியில் உள்ள வீடுகள், கடைகளை தீ வைத்து எரித்து குகி இனத்தை சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.



## டெல்லியில் 5 வது நாளாக காற்றின் தரம் மிகவும் மோசமடைந்தது

இந்திய தலைநகர் டில்லியில் காற்றின் தரம் தொடர்ந்து ஐந்தாவது நாளாக மிகவும் மோசமடைந்துள்ளது. இதன்படி, ஞாயிற்றுக்கிழமை காலை காற்றின் தரக் குறியீடு 428ஐ எட்டியது.

இந்நிலையில், டில்லி இந்திரா காந்தி விமான நிலையத்தில் பார்வைத்திறன் 800 மீட்டராக குறைந்ததுடன், இதனால் 107 விமானங்கள் தாமதமாகவும், மூன்று விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

### விமான போக்குவரத்து பாதிப்பு

டில்லியின் காற்றின் தரம் மிகவும் மோசமான நிலைக்கு சென்றுள்ளது. டில்லியில் பல இடங்களில் காற்றின் தரக் குறியீடு 400ஐத் தாண்டியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மோசமான காற்றின் தரம் கடுமையான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்ற கவலைகளை அதிகரித்துள்ளன. இதனால் கண், சுவாசக் கோளாறு போன்றவற்றால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

டில்லியில் உள்ள 33 காற்றின் தர கண்காணிப்பு நிலையங்களில் 22 மோசமான நிலையங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், காற்று மாசினைக் குறைக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அதிகாரிகளுக்கு டில்லி சுகாதாரத் துறை அமைச்சர் கோபால் ராய் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் காற்று மாசுக்கான கட்டுப்பாடுகளை தீவிரமாக கடைபிடிக்கவும் அறிவுறுத்தியுள்ளார்.

வாகனங்களின் உமிழ்வு, அண்டை மாநிலங்களில் பயிர்க் கழிவுகளை எரிப்பது உள்ளிட்டவற்றால் டில்லியில் காற்று மாசு அதிகரித்துக் காணப்படுகிறது.

பாகிஸ்தானின் லாகூருக்கு அடுத்தபடியாக உலகளவில் காற்று மாசு அதிகமுள்ள நகரமாக டில்லி பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஜி20 உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்கேற்பு




இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 06 நாட்களுக்கு நைஜீரியா, பிரேசில் மற்றும் கயானா ஆகிய 3 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

நைஜீரியா ஜனாதிபதி போலா அகமது தினுபு அழைப்பின் பெயரில் பிரதமர் மோடி நேற்று அதிகாலை அபுஜா சென்றடைந்தார். இதன்போது அவருக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

17 ஆண்டுகளுக்குப் பின்னர் நைஜீரியா செல்லும் முதல் இந்திய பிரதமர் என்ற பெருமையும் அவரையே சேரும்.

அந்நாட்டு ஜனாதிபதி போலா அகமது தினுபுவை சந்தித்து இருதரப்பு உறவை பலப்படுத்துவது குறித்து அவர் கலந்துரையாடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும் அங்கு வசிக்கும் இந்தியர்களை சந்தித்தும் கலந்துரையாடியுள்ளார்.

நைஜீரியா பயணத்தை நிறைவு செய்து பிரேசில் செல்லும் மோடி ரியோ டி ஜெனிரோ நகரில் இன்று திங்கட்கிழமை (18.11.2024) நடைபெறவுள்ள ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்கவுள்ளார். இந்த மாநாட்டுக்கு பிரேசில் ஜனாதிபதி லுயிஸ் இனாசியோ லுலா டா சில்வா தலைமை தாங்குகிறார்.

இதனைத் தொடர்ந்து பிரேசில், கயானா செல்லும் பிரதமர் மோடி, இந்திய வம்சாவளியினருடன் சந்திப்பு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# உயிரிழந்தவரின் கண்ணை காணவில்லை

## எலி கடித்ததாக தெரிவிப்பு

பீகார் மாநிலம் பாட்னாவில் உள்ள வைத்தியசாலையில் உயிரிழந்த ஒருவரின் இடதுபக்க கண் காணாமல் போனது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், உயிரிழந்தவரின் கண்ணை எலி கடித்திருக்கலாம் என வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து இந்த விவகாரத்தில் வைத்தியசாலை நிர்வாகம் அலட்சியத்துடன் செயல்பட்டதாக கூறி, உயிரிழந்தவரின் குடும்பத்தினர் வைத்தியசாலை வளாகத்திற்குள் போராட்டம் நடத்தினர்.



இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நவம்பர் 14ஆம் திகதி பன்டூஷ் என்ற நபரை மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும், அவர் சிகிச்சைப் பலனின்றி 15ஆம் திகதி இரவு உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் உடல் பிரேதப் பரிசோதனை செய்யப்படவிருந்த நிலையில், அவரது இடது கண் காணாமல் உறவினர்கள் கண்டுள்ளனர்.

மேலும், அறுவை சிகிச்சை பிளேடு ஒன்று சடலத்துக்கு அருகில் இருந்ததாக உறவினர் ஒருவர் குற்றம் சாட்டினார். எவ்வாறாயினும், உயிரிழந்தவரின் கண்ணை எலி கடித்திருக்கலாம் என்று வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து இந்த விவகாரத்தில் மருத்துவமனை நிர்வாகம் அலட்சியத்துடன் செயல்பட்டதாக கூறி, பன்டூஷ் குடும்பத்தினர் மருத்துவமனை வளாகத்திற்குள் போராட்டம் நடத்தினர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட வைத்தியசாலையின் கண்காணிப்பாளர், ”இந்த விவகாரம் தொடர்பாக விசாரிக்க நான்கு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

யாராவது அவர் கண்ணை வெளியே எடுத்தார்களா அல்லது எலி கண்ணை கடித்ததா என்ற இரண்டு கோணத்தில் விசாரகணைகளை முன்னெடுத்துள்ளோம்.

இது இரண்டில் எது நடந்திருந்தாலும் அது தவறு தான். விசாரணைக்கு பின் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்” என்று அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக மருத்துவமனையில் உள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து, விசாரணை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மோடிக்கு நினைவாற்றல் இழப்பு

### ராகுல் காந்தி விமர்சனம்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை போலவே பிரதமர் மோடியும் நினைவாற்றல் இழப்பால் அவதிப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

ஜோ பைடன் ஒருமுறை உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் என்று ஒரு நிகழ்வில் அறிமுகப்படுத்தியதை நினைவுயும் ராகுல் காந்தி கூர்ந்தார்.

மகாராஷ்டிர மாநில சட்டப் பேரவைக்கான தேர்தல் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்நிலையில், அமராவதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டு பேசிய ராகுல் காந்தி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

”பிரதமர் மோடியின் உரையை கேட்டதாக என் சகோதரி என்னிடம்



கூறினார். அந்த உரையில், நாம் எதைச் சொன்னாலும், மோடியும் அதையே திரும்பி சொல்வதாக அவர் கூறினார். எனக்கு தெரியாது. ஒருவேளை அவர் நினைவாற்றலை இழந்திருக்கலாம்.

அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் எல்லாவற்றையும் மறந்துவிடுவார். பின்னால், இருந்து அவருக்கு நினைவுபடுத்த வேண்டியிருந்தது. உக்ரைன் ஜனாதிபதி வந்ததற்கு, ரஷிய ஜனாதிபதி புதின் வந்திருப்பதாக அவர் கூறினார்.

அவர் நினைவாற்றலை இழந்திருந்தார். அதேபோல நமது பிரதமரும் நினைவாற்றலை இழந்து நிற்கிறார்.

சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தவேண்டும் என்றும், 50 சதவீத இடஒதுக்கீட்டை நீக்கவேண்டும் என்றும் நான் மக்களவையில் பேசினேன். ஆனால் நான் இடஒதுக்கீட்டுக்கு எதிரானவன் என்ற ரீதியில் பிரதமர் மோடி பேசி வருகிறார்.

தலித்துகள், ஆதிவாசிகள், பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைக்காக நான் நிற்கிறேன். என்னுடைய புகழைக் கெடுக்க பாஜகவினர் கோடிக்கணக்கான ரூபாயை செலவழிக்கின்றனர். யாரைக் கண்டும் நான் அஞ்சமாட்டேன்.

மக்களின் நலனுக்காக தொடர்ந்து குரல் கொடுப்பேன். விவசாயிகளையும், சிறு வியாபாரிகளையும் கொல்வதற்காகவே ஜிஎஸ்டியும், பணமதிப்பிழப்பும் கொண்டு வரப்பட்டது” என்று அவர் பேசினார்.

## தலைமறைவாகியிருந்த நடிகை கஸ்தூரி கைது

தெலுங்கு மக்கள் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில், தலைமறைவாக இருந்த நடிகை கஸ்தூரியை ஹைதராபாத்தில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்து மக்கள் கட்சி சார்பில் சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டம் ஒன்றில் நடிகை கஸ்தூரி கலந்துகொண்டு பேசும்போது, தெலுங்கு மக்கள் குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்தார்.

அவரது இந்த பேச்சுக்கு தெலுங்கு பேசும் மக்களிடையே கடும் எதிர்ப்பு எழுந்தது. மேலும், பல்வேறு தரப்பிலிருந்தும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, தனது பேச்சுக்கு கஸ்தூரி வருத்தம் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், கஸ்தூரி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சென்னை, மதுரை உட்பட பல்வேறு பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் ஆறு முறைப்பாடுகள் பதிவு



செய்யப்பட்டிருந்தன.

இதன்படி, அகில இந்திய தெலுங்கு சம்மேளனம் சார்பில் சென்னை எழும்பூர் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் பேரில், நடிகை கஸ்தூரி மீது நான்கு சட்ட பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையிலேயே, கஸ்தூரி தலைமறைவாகிவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, கஸ்தூரியை கைது செய்யும் நடவடிக்கையில் சென்னை மற்றும் மதுரை பொலி ஸார் தீவிரம் காட்டினர். இந்நிலையில், ஹைதராபாத்தில் பதுங்கி இருந்த கஸ்தூரியை சென்னை பொலிஸார் சனிக்கிழமை இரவு கைது செய்தனர். இந்நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை கஸ்தூரி சென்னை அழைத்துவரப்பட்டார். தொடர்ந்தும் அவரிடன் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# லெபனான் மீது ஒரே நாளில் 145 முறை குண்டுகளை வீசியது இஸ்ரேல்

ஒரே நாளில் நாடு முழுவதும் 145 இஸ்ரேலிய தாக்குதல்கள் நடந்ததாக லெபனான் அதிகாரிகள் அறிவித்துள்ள நிலையில், இஸ்ரேலியப் படைகள் பெய்ரூட்டின் தாஹியே மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

காசாவில், ரஃபா மற்றும் Bureij அகதிகள் முகாம் மீதான தாக்குதல்களில் 15 பாலஸ்தீனியர்களைக் இஸ்ரேலியப் படைகள் கொன்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில், முகமூடி அணிந்த இஸ்ரேலிய குடியேற்றக்காரர்கள் பீட் ஃபுரிக் கிராமத்தை தாக்கி பாலஸ்தீன வீடுகள் மற்றும் வாகனங்களுக்கு தீ வைத்தனர்.

இந்நிலையில், ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேல் இராணுவத்துடன் தொடர்ந்தும் போரிட்டு வருவதுடன், இஸ்ரேலிய இராணுவ தளங்களை நோக்கிய ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை ஏவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்களினால் குறைந்தது 43,799 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதுடன் 103,601 பேர் காயமடைந்துள்ளனர்.

2023 ஒக்டோபர் ஏழாம் திகதி முதல் இஸ்ரேலில் ஹமாஸ் தலைமையிலான தாக்குதல்களின் போது 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதுடன், 200 க்கும் மேற்பட்டோர் சிறைபிடிக்கப்பட்டனர்.

லெபனானில், போர் தொடங்கியதில் இருந்து இஸ்ரேலிய தாக்குதல்களில் குறைந்தது 3,452 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 14,664 பேர் காயமடைந்துள்ளனர்.

# ட்ரம்புடன் இணைந்து பணியாற்ற தயார் என்கிறது சீனா



ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் தொடர்புகளைப் பேணுவதற்கும் புதிய அமெரிக்க நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக உள்ளதென சீன ஜனபாதிபதி சி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

சி ஜின்பிங் மற்றும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இருவரும் பெருவில் நடைபெறும் வருடாந்த ஆசிய-பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாட்டின் இடையே சந்தித்துள்ளனர்.

இதன்போது தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்புடன் இணைந்து பணியாற்றுவதாக ஜின்பிங் உறுதியளித்துள்ளார்.

ஆனால் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருட்களுக்கும் 60 வீதம் வரி விதிப்பதாக ட்ரம்ப் கூறியிருக்கிறார்.

இந்நிலையில் பதவியேற்கவுள்ள ட்ரம்ப், சீன இறக்குமதிகள் மீதான வரிகளை உயர்த்துவது உள்ளிட்ட காரணங்களால் அமெரிக்க-சீனா உறவு மேலும் நிலையற்றதாக மாறும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.


ட்ரம்ப், தனது முதல் பதவிக் காலத்தில், சீனாவை மூலோபாய போட்டியாளர் என்று முத்திரை குத்தினார். கொவிட் தொற்றுநோய் பரவலின் போதும் சீன வைரஸ் என்று முத்திரைக் குத்தினார்.

# சீனாவில் கத்திக் குத்துத் தாக்குதல்: 8 பேர் உயிரிழப்பு

சீனாவின் வூக்ஸி நகரில் 21 வயது இளைஞர் மேற்கொண்ட கத்திக் குத்து தாக்குதலில் 8 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தின் வூக்ஸி நகரில் கல்வி நிறுவனம் ஒன்றில் கற்கும் இளைஞனர் கண்ணில் தென்பட்டவர்கள் மீது கத்திக்குத்துத் தாக்குதல் நடத்தினார். இதன்போது படுகாயமடைந்த 17 பேர் வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதாக சர்வசேத ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் அந்நாட்டு பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் பொதுமக்கள் ஆயுதம் வைத்திருப்பதற்கு அனுமதியில்லாத நிலையிலும் இது போன்ற தாக்குதல்கள் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# 19 ஆவது ஜி 20 உச்சி மாநாடு இன்று




பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் 19 ஆவது ஜி-20 உச்சி மாநாடு இன்றும் நாளையும் மற்றும் நாளை நடைபெற உள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, சீன அதிபர் ஜி ஜின்பிங் உட்பட உலக நாட்டு தலைவர்கள் மாநாட்டில் கலந்துக் கொள்கிறார்கள். ஜி-20 உச்சி மாநாட்டை முன்னிட்டு அந்நாட்டு பாதுகாப்பு படையினர், ரியோ டி ஜெனிரோவில் பிரமாண்ட பாதுகாப்பு ஒத்திகையை நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தினர். ஜி-20, என்பது இருபது உலக நாடுகள், நிதி வளங்களின் நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டமைப்பாகும். இவ்வமைப்பில் உலகின் 19 வளர்ச்சியடைந்த நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் உறுப்புரிமை பெற்றுள்ளன.

ஆர்ஜென்டினா, அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்சு, ஜேர்மன், இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா, தென் கொரியா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன இணைந்த பொருளியல் கூட்டமைப்பு ஆகும். ஜி-20 பொருளாதாரம் மொத்த உலக உற்பத்தியில் 85 வீதமும் , உலக வணிகத்தில் 80 வீதமும், உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கையும் கொண்டுள்ளது.

கடந்த வருடம் ஜி 20 உச்சி மாநாடு இந்தியாவின் புதுடில்லியில் நடைபெற்றது. இதன்போது 20 உறுப்பு நாடுகள், 9 விருந்தினர் நாடு, 14 உலகப் பெருந்தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

# நெதன்யாகுவின் வீட்டை இலக்கு வைத்து தாக்குதல்



## பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் வீட்டை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும், இதன்போது இரண்டு பிளாஷ் குண்டுகள் அவரின் வீட்டின் மீது வீசப்பட்டதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிசேரியாவில் உள்ள பெஞ்சமின் நெதன்யாகுவின் இல்லத்தின் மீது சனிக்கிழமை இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டதாக பொலிஸாரை மேற்கோள்காட்டி செய்தி நிறுவனமான ராய்ட்டர்ஸ் நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும, அந்த குண்டுகள் தோட்டத்தில் விழுந்ததாகக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் நெதன்யாகுவோ அல்லது அவரது குடும்பத்தினரோ (வீட்டில்) இல்லை என்றும், எந்த சேதமும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த தாக்குதல் குறித்து இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ், நெதன்யாகுவின் வீட்டிற்கு குண்டுகளை வீசுவது என்பது அனைத்து சிவப்புக் கோடுகளையும் கடக்கும் செயல் என்று கூறினார்.

”ஈரான் மற்றும் அவரை படுகொலை செய்ய முயற்சிக்கும் அதன் பினாமிகளால் அச்சுறுத்தப்படும் இஸ்ரேலின் பிரதமருக்கு, வீட்டிலிருந்து அதே அச்சுறுத்தல்களுக்கு ஆளாவது சாத்தியமில்லை” என்று பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் கூறினார்.

”ஷின் பெட் மற்றும் இஸ்ரேல் பொலிஸார் மற்றும் அனைத்து சட்ட அமுலாக்க மற்றும் நீதித்துறை முகவர்களும் இந்த தீவிர நிகழ்வுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், இந்த நிலைமையை முடிவுக்கு கொண்டுவருவதற்கும் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும்,” என்று அவர் மேலும் கூறினார். இச்சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ள இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக், இது குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக தெரிவித்தார். சிசேரியாவில் உள்ள பெஞ்சமின் நெதன்யாகுவின் வீடு குறிவைக்கப்படுவது இது முதல் முறையல்ல. கடந்த மாதம் பிரதமரின் வீட்டை நோக்கி ஆளில்லா விமானம் ஏவப்பட்டது.

ஈரானுடன் இணைந்த லெபனான் போராளிக் குழுவான ஹிஸ்புல்லா தன்னையும் அவரது மனைவியையும் படுகொலை செய்ய முயன்றதாக நெதன்யாகு அப்போது குற்றம் சாட்டினார்.

காசா பகுதியில் இஸ்ரேல்-ஹமாஸ் போருக்கு இணையாக இஸ்ரேலும் ஹிஸ்புல்லாவும் ஒரு வருடத்திற்கும் மேலாக போரிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# போர் விரைவில் முடிவுக்கு வரும் உக்ரைன் ஜனாதிபதி நம்பிக்கை

அமெரிக்க ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் ரஷ்யாவுடனான போர் ”விரைவில் முடிவடையும்” என்று உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு ட்ரம்ப் உடனான தொலைபேசி உரையாடலின் போது அவருடன் ”ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாற்றம்” செய்ததாக ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவுடன் சாத்தியமான பேச்சு வார்த்தைகள் குறித்து ட்ரம்ப் ஏதேனும் கோரிக்கை வைத்தாரா என்பதை அவர் கூறவில்லை, ஆனால் உக்ரைனின் நிலைப்பாட்டிற்கு முரணான எதையும் தெரிவிக்கவில்லை என்று குறிப்பட்டார்.

2022 பெப்ரவரியில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் முழு அளவிலான ஆக்கிரமிப்புடன் தொடங்கிய போரை முடிவுக்குக் கொண்டுவருவதே தனது முன்னுரிமை என்று ட்ரம்ப் கூறியதாகவும் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்யா – உக்ரைன் போர் தொடங்கியதில் இருந்து உக்ரைனுக்கு அமெரிக்கா மிகப்பெரிய ஆயுத விநியோகத்தை செய்து வருகின்றது.

ஜெர்மனியின் ஆராய்ச்சி நிறுவனமான உலகப் பொருளாதாரத்திற்கான கீல் இன்ஸ்டிடியூட் படி, போரின் தொடங்கியதில்



இருந்து ஜூன் 2024 இறுதிக்கும் இடையில் சுமார் 55.5 பில்லியன் டொலர் மதிப்புள்ள ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை அனுப்பியுள்ளதாக கூறப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின் போது உரையாற்றியிருந்த ட்ரம்ப், ”ஒரு நாளில்” போரை முடிவுக்கு கொண்டுவருவதாக பலமுறை உறுதியளித்தார். ஆனால் அவர் அதை எவ்வாறு செய்யப் போகின்றார் என்பதை இன்னும் வெளியிடவில்லை. இந்நிலையில், ”தற்போது வெள்ளை மாளிகையை வழிநடத்தும் அணியின் கொள்கைகளுடன் போர் விரைவில் முடிவடையும் என்பது உறுதி என உக்ரேனிய ஊடகமான சஸ்பில்னேவுக்கு அளித்த செவ்வியில் ஜெலென்ஸ்கி கூறினார்.

இது அவர்களின் அணுகுமுறை, அவர்களின் குடிமக்களுக்கு அவர்கள் அளித்த வாக்குறுதி,” ஜெலென்ஸ்கி கூறினார்.

ரஷ்யாவுடனான ”இந்தப் போர் அடுத்த ஆண்டு முடிவடையும் என்றும், இராஜதந்திர வழிகளில் முடிவடையும் வகையில் அனைத்தையும் செய்ய வேண்டும்” என்று அவர் கூறினார். இதேவேளை, ரஷ்யப் படைகள் உக்ரைனின் கிழக்கு மற்றும் தென்-கிழக்கில் வேரூன்றிய நிலைகளை ஆக்கிரமித்துள்ளன, முக்கியமாக கிழக்கு டான்பாஸ் பிராந்தியத்தில் போரிட்டு வருகின்றது.

ரஷ்யப் படைகள் கிழக்குப் போர்முனையில் பெருகிய முன்னேற்றங்களை கண்டுள்ளன.

வடகிழக்கு நகரமான குப்யான்ஸ்க் மற்றும் தென்கிழக்கில் வுஹ்லேடரைச் சுற்றி மோதல் நடந்ததாக வாஷிங்டனில் உள்ள போர் ஆய்வு நிறுவனம் (ISW) தெரிவித்துள்ளது.




# ஐ.சி.சி சம்பியன்ஸ் ட்ராபி




## இந்தியா- பாகிஸ்தான் முறுகல்

ஐசிசி சம்பியன்ஸ் ட்ராபி கிண்ணத்தை காஷ்மீர் பகுதிக்கு எடுத்துச் செல்ல பாகிஸ்தான் கிரிக்கெட் அமைப்பு திட்டமிட்டிருந்த நிலையில், அதற்கு இந்திய கிரிக்கெட் சபை கடும் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளதுது.

அடுத்த (2025) ஆண்டு பெப்ரவரி மாதம் சம்பியன்ஸ் ட்ராபி கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானில் இடம்பெறவுள்ளது. பாதுகாப்பை காரணம் காட்டில் இந்த தொடரில் பங்கேற்க இந்திய அணி மறுப்புவெளியிட்டுள்ளது.

மறுபுறம் இந்திய அணி முன்வைத்துள்ள ஹைபிரட் முறையை பாகிஸ்தான் ஏற்க மறுத்துள்ளது.

இந்நிலையில், சம்பியன்ஸ் ட்ராபி கிண்ணத்தை பாகிஸ்தானில் உள்ள முக்கிய நகரங்களுக்கு எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டு இருந்தது.

இந்தத் தொடருக்கான போட்டிகள் நடைபெறும் கராச்சி, லாகூர் மற்றும் ராவல்பிண்டி ஆகிய மூன்று நகரங்களை தாண்டி, ஸ்கார்டு, முர்ரீ, ஹன்சா மற்றும் முஸாஃபராபாத் ஆகிய நகரங்களுக்கும் கிண்ணத்தை எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டு இருந்தது.

இதில் ஸ்கார்டு மற்றும் முஸாஃ பராபாத் ஆகிய இரண்டு நகரங்களும் காஷ்மீர் பகுதியில் உள்ளது. இதனால் இந்திய கிரிக்கெட் சபை இதற்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டு சர்வதேச கிரிக்கெட் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவந்தது.

இதனால், உடனடியாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் பாகிஸ்தான் கிரிக்கெட் அமைப்பிடம் அந்தத் திட்டத்தை கைவிடுமாறு அறிவுறுத்தியது.

இதனை அடுத்து சாம்பியன்ஸ் ட்ராபி கிண்ணம் இந்த தொடர் நடைபெற உள்ள கராச்சி, லாகூர் மற்றும் ராவல்பிண்டி ஆகிய மூன்று நகரங்களுக்கு மட்டுமே எடுத்துச் செல்லப்படும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

# இங்கிலாந்தை விரட்டியடித்த மேற்கிந்தியத் தீவுகள்

(அரபாத் பஹர்தீன்)

சுற்றுலா இங்கிலாந்து அணிக்கு எதிரான நான்காவது இருபதுக்கு இருபது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இவ்விரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட டி20 தொடரின் முதல் மூன்று போட்டிகளிலும் இங்கிலாந்து அணி தொடரை ஏற்கனவே வெற்றி கொண்டிருக்க நான்காவது சென் லூசியாவில் இடம்பெற்றது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தேர்ந்தெடுத்தது. அதற்கமைய முதலில் துடுப்பாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பின்னர் இங்கிலாந்து அணியால் நிர்ணயிக்கப்பட்ட 219 ஓட்டங்கள் என்ற கடின வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு துடுப்பாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி அணி லிவிஸ் (68) மற்றும் ஹோப்ஸ் (54) ஆகியோரின் அதிரடி அரைச் சதங்களின் உதவியுடன் 19 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைப் பதிவு செய்தது.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரை 3-1 என இங்கிலாந்து அணி வெற்றி கொண்டிருக்க, ஐந்தாவதும் இறுதியுமான போட்டி நாளை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தோற்றாலும் எனக்கு வெற்றிதான்

## மைக் டைசன்

சுமார் 19 ஆண்டுகளுக்கு பின்னர் தொழில்முறை குத்துச் சண்டை போட்டிக்கு திரும்பிய ஜாம்பவான் மைக் டைசன், 27 வயது குத்துச்சண்டை வீரர் ஜேக் போல்க்கு எதிராக தோல்வியை சந்தித்துள்ளார்.

எட்டுச் சுற்றுகள் கொண்ட இந்தப் போட்டியில் ஜேக்பால் 79-73 என்ற புள்ளிக் கணக்கில் மைக் டைசனை வீழ்த்தினார்.

குத்துச்சண்டை ஜாம்பவான் மைக் டைசன் சுமார் 19 ஆண்டுகளுக்கு பின் ஜேக் போல் என்ற 27 வயது குத்துச்சண்டை வீரருக்கு எதிராக தொழில்முறை போட்டியில் பங்கேற்றார்.

டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள எர்லிங்டன் நகரில் இந்தப் போட்டி இடம்பெற்றிருந்தது. போட்டியின் முடிவில் ஜேக் பால் புள்ளிகள் அடிப்படையில் மைக் டைசைனை வீழ்த்தினார்.

58 வயதான மைக் டைசன், 27 வயது இளம் வீரருடன் போட்டி போடுவது தவறு என பலரும் போட்டிக்கு முன்பே கூறி வந்த நிலையில், போட்டியை பார்த்த ரசிகர்கள் சோர்வடைந்தனர்.

மைக் டைசன் வயது மூப்பின் காரணமாக கால்களை வேகமாக நகர்த்த முடியாமல் திணறினார். இந்தப் போட்டியில் ஜேக் பால் 278 முறை மைக் டைசனை தாக்க முயன்றார். அதில் 78 தாக்குதல்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

மறுபுறம் மைக் டைசன் 97 முறை மட்டுமே ஜேக் பாலை தாக்க முயன்றார். அதில் 12 தாக்குதல்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நடுவர்களில் ஒருவர் 80-72 எனவும், மற்றொருவர் 79-73 எனவும் ஜேக் போலுக்கு சாதகமாக புள்ளிகளை வழங்கினார்கள். இந்தப் போட்டியில் மூன்றாவது சுற்றுக்கு பின் மைக் டைசன் ஒவ்வொரு சுற்றிலும் தன்னை தற்காத்துக் கொள்வதில் தான் அதிக நேரத்தை செலவிட்டார். சமூக வலைதளங்களில் இந்தப் போட்டிக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இது முதியவருக்கு எதிரான வன்முறை என சிலர் விமர்சித்து வருகின்றனர். மைக் டைசனுக்கு 170 கோடி ரூபாய் கிடைக்கும் என்பதால் தான் அவர் இந்தப் போட்டிக்கு ஒப்புக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

போட்டி குறித்து கருத்து வெளியிட்ட மைக் டைசன், "சில சூழ்நிலைமைகளில் நீங்கள் தோற்றாலும் அது வெற்றிதான். நேற்றைய இரவுக்கு நான் நன்றியுள்ளவனாக இருப்பேன். கடைசியாக ஒருமுறை பாக்சிங் ரிங்கிற்குள் வந்ததை நினைத்து நான் வருத்தப்படவில்லை.

நான் கிட்டத்தட்ட கடந்த ஜுன் மாதம் இறந்துவிட்டேன். எனக்கு எட்டு முறை ரத்தம் ஏற்றப்பட்டது. வைத்தியசாலையில் பாதி இரத்தத்தையும் 25 பவுண்டுகள் எடையையும் இழந்தேன். உடல்நலத்துடன் இருக்கவே நான் போராட வேண்டியிருந்தது. ஆனால் அதில் நான் வெற்றி பெற்றேன். நான் உறுதியுடன் ரிங்கிற்குள் இருப்பதை என் குழந்தைகள் பார்க்க வேண்டும். என் வயதில் பாதியை உடைய ஒரு திறமையான போராளியுடன் சண்டையிட்டேன். இது மிக சிறந்த அனுபவம். நன்றி" என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் உலக "ஹெவிவெயிட்" சம்பியனான மைக் டைசன், இதுவரை விளையாடிய 58 குத்துச்சண்டை போட்டியில், 50 போட்டியில் வெற்றி கண்டுள்ளார். இதில் 44 போட்டியில் எதிரணி வீரரை "நாக்-அவுட்" முறையில் வீழ்த்தினார். ஆறு போட்டியில் மட்டும் தோல்வியடைந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




# டி20 வரலாற்றில் சாதனை செய்த சஞ்சு சாம்சன்

தென்னாப்பிரிக்க அணிக்கு எதிரான நான்காவது டி20 போட்டியில் சஞ்சு சாம்சன் சதம் அடித்ததன் மூலம் பல்வேறு சாதனைகளை உடைத்து எறிந்து இருக்கிறார்.

அவர் இந்த ஆண்டு மட்டுமே மூன்று டி20 சதங்களை அடித்து இருக்கிறார். அவரது கிரிக்கெட் வாழ்க்கையில் அடிக்கப்பட்ட மூன்று சதங்களும் 2024 ஆம் ஆண்டில் மட்டுமே அடிக்கப்பட்டு உள்ளது.

இதன் மூலம், சர்வதேச டி20 போட்டிகளில் ஒரே ஆண்டில் அதிக சதம் அடித்த வீரராக சஞ்சு சாம்சன் மாபெரும் வரலாற்று சாதனையை நிகழ்த்தி இருக்கிறார். இதற்கு முன் நான்கு வீரர்கள் ஒரே ஆண்டில் இரண்டு சர்வதேச டி20 சதங்களை அடித்து இருந்தனர். கோலின் மன்றோ, ஃபில் சால்ட், சூர்யகுமார் யாதவ் மற்றும் ரோஹித் சர்மா ஆகிய நால்வர் ஒரே ஆண்டில் இரண்டு சதங்களை அடித்து இருந்தனர்.

ஐந்தாவதாக திலக் வர்மாவும் தென்னாப்பிரிக்க டி20 தொடரின் மூன்றாவது மற்றும் நான்காவது போட்டிகளில் சதம் அடித்து, ஒரே ஆண்டில் இரண்டு சதங்கள் அடித்திருந்தார்.

அவர்கள் அனைவரையும் முந்தி இருக்கும் சஞ்சு சம்சன் ஒரே ஆண்டில் மூன்று சதங்களை அடித்த முதல் வீரர் என்ற பெருமையை பெற்று இருக்கிறார்.

மேலும், ஒரே டி20 தொடரில் இரண்டு சதங்கள் அடித்த இரண்டாவது வீரர் என்ற பெருமையும் பெற்றார்.

முன்னதாக இங்கிலாந்து அணியின் ஃ பில் சால்ட் ஒரே தொடரில் இரண்டு சதங்களை அடித்திருந்தார்.




சஞ்சு சாம்சனுக்கு பின் திலக் வர்மா மூன்றாவதாக இந்த சாதனையை செய்து இருக்கிறார். சஞ்சு சாம்சன் இந்த ஆண்டு மேலும் ஒரு சாதனையை செய்து இருக்கிறார்.

ஆனால், அது படுமோசமான டி20 சாதனை ஆகும். 2024 ஆம் ஆண்டில் சஞ்சு சாம்சன் ஐந்து முறை சர்வதேச டி20 போட்டிகளில் டக் அவுட் ஆகி இருக்கிறார்.

இந்த ஆண்டு சஞ்சு சாம்சன் மேலும் பல சாதனைகளை தனக்கு சொந்தமாக்கியுள்ளார்.

இதன்படி, சர்வதேச டி20 போட்டிகளில் சதம் அடித்த முதல் இந்திய விக்கெட் கீப்பர், வெளிநாட்டில் டி20 சதம் அடித்த முதல் இந்திய விக்கெட் கீப்பர், அதிக முறை டக் அவுட் ஆன இந்திய விக்கெட் கீப்பர் என பல்வேறு சாதனைகளை அவர் செய்து இருக்கிறார்.

# இறுதி நிமிட அசத்தல் கோலால் ஏமனை வீழ்த்தி

## வரலாறு படைத்தது இலங்கை

(அரபாத் பஹர்தீன்)

பலமிக்க எமன் அணிக்கு எதிரான உதைப்பந்தாட்ட போட்டியில் 89 ஆவது நிமிடத்தில் ஜாக் ஹிங்கர்ட்டின் தலையால் முட்டி கோலை அடிக்க 1-0 என்ற கோல் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது இலங்கை அணி.

உலக நட்புறவு உதைப்பந்தாட்ட தொடரின் அங்கமாக இடம்பெற்ற இலங்கைஅணிக்கும், எமன் அணிக்கும் இடையிலான முதல் சுற்றுப் போட்டி கட்டார் டோஹாவிலுள்ள அல் கோர் மைதானத்தில் இடம்பெற்றது. இலங்கை நேரப்படி (17) இரவு 9.45 மணிக்கு போட்டி ஆரம்பித்தது. போட்டியின் ஆரம்பம் முதல் விறுவிறுப்பிற்குப் பஞ்சமின்றி இடம்பெற்றது. இதனால் முதல் பாதி கோல்கள் இன்றி சமநிலை பெற்றது. பின்னர் தொடர்ந்த இரண்டாவது பாதி ஆட்டத்திலும் இரு அணி வீரர்களும் கோலுக்கான முயற்சியில் தீவிரம் காட்டினர். இரு அணிகளின் தடுப்பு வீரர்கள் மற்றும் கோல் காப்பாளர்களின் அசத்தலால் இரு அணிகளாலும் கோல் கணக்கை ஆரம்பிக்க முடியவில்லை. இருப்பினும் போட்டியின் இறுதி நிமிடங்களில் இலங்கை வீரர்கள் தீவிரம் காட்ட போட்டியின் 89வது நிமிடத்தில் கோல் அடிக்கப்பட்டது. இதனால் பலமிக்க ஏமன் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை பதிவு செய்தது இலங்கை அணி.

